பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 05 ஞாயிற்றுக்கிழமை (21-07-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:238

## வலி.வடக்குப் பிரதேசத்தில்

# மீள்குடியமர்வு இலகுவானதல்ல

# கட்டம் கட்டமாகவே நடக்கும்!

## பாதுகாப்புச் செயலர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஜூலை21

**வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவது இலகுவான விடயமல்ல, பாதுகாப்புக் காரணங்கள் மட்டுமல்ல, வேறு பல காரணங்களும் இதில் தொடர்புபட்டுள்ளன. ஆகவே, கட்டம் கட்டமாகவே மீளக்குடியமர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

**- இப்படிக் கூறினார் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ.**

வலி.வடக்கில் மக்களை மீளக் குடியமர அனுமதிப்பது தொடர்பாக ஆராய்வதற்காகத் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் நேற்றுக் கூட்டப்பட்ட மாநாட்டில் பேசுகையிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

வலி.வடக்குப் பிரதேச செயலர் திருமதி ப.திலகநாயகம் போல் தலைமையில் நடந்த இந்த மாநாட்டில் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல, யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் கரலியத்த ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன், கூட்டமைப்பு நாடாளு

(12ஆம் பக்கம் பார்க்க)



பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ நேற்றைய கூட்டத்தில் உரையாற்றுவதையும், பாதுகாப்பு அமைச்சின் மேலதிகச் செயலர் கரலியத்த, இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பலகல்ல, யாழ்.மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் பொன்சேகா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

## பலாலி இராணுவத் தளத்தில் நேற்றிரவு உயர்மட்ட மாநாடு

யாழ்ப்பாணம்,ஜூலை21

வலி.வடக்கு மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக ஆராய உயர்மட்ட மாநாடு ஒன்று நேற்றிரவு பலாலி இராணுவத் தளத்தில் இடம்பெற்றது.

இந்த மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல, யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா மற்றும் பிரதேச தளபதிகள் கலந்துகொண்டனர்.

மீளக்குடியமர்வு குறித்து இந்தக் கூட்டத்தில் சில முடிவுகள் எடுக்கப்பட்டதாகவும் - எதிர்வரும் 30 ஆம் திகதி கொழும்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், தமிழர் கூட்டமைப்புக்கும் இடையில் இடம்பெறும் சந்திப்பில் மேற்படி கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் வெளியிடப்படும் என்றும் - கூறப்பட்டது. (ஏ-3-8)

## ஆடி அமாவாசையன்று

## சோதனை எதுவுமின்றி கீரிமலை செல்லமுடியும்!

யாழ்ப்பாணம்,ஜூலை21

ஆடி அமாவாசையன்று பிதிர்க் கடன் செலுத்துவதற்காக செல்லும் பக்தர்கள் எவ்வித சோதனைகளும் இன்றி பாதுகாப்பு சோதனை நிலையங்கள் ஊடாக அனுமதிக்கப்படுவர். என்று பாதுகாப்பு அமைச்சுச் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

தெல்லிப்பழையில் நேற்று நடந்த கூட்டத்திலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

ஆடிஅமாவாசை தினத்தன்று கீரிமலை செல்லும் பக்தர்கள் எவ்வித சோதனைகளும் இன்றி - சுதந்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வேகக் கட்டுப்பாட்டை மீறும் வாகனங்கள் மீது நடவடிக்கை

### தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் அறிவிப்பு

கிளிநொச்சி,ஜூலை21

ஏ-9 கண்டி வீதியில் வேகக் கட்டுப்பாட்டை மீறும் வாகனங்களின் சாரதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அறிவித்துள்ளார்.

கண்டி வீதியில் கிளிநொச்சி, பளை, மாங்குளம், பரந்தன், புளியங்குளம் ஆகிய நகரப் பகுதிகளில் 30 கிலோ மீற்றர் வேகத்திலும் -

ஏனைய பகுதிகளில் 40 கிலோ மீற்றர் வேகத்திலும் - வாகனங்களைச் செலுத்தவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

இந்த நடைமுறையை மீறும் வாகனங்களின் சாரதிகள் மீது முறைப்படியான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் எச்சரித்துள்ளார். கடந்த சில வாரங்களாக இந்த வீதியில் விபத்துகள் அதிகரித்துள்ளதால் இந்த நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது என்று அவர் சொன்னார். (ம-3)

## கண்காணிப்புக் குழுவினரை காப்புறுதி செய்ய கோரிக்கை

### ஒவ்வொருவரையும் 10லட்சம் டொலருக்கு

கொழும்பு,ஜூலை21

தனது உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் 10 லட்சம் டொலருக்குக் காப்புறுதி செய்து, பாதுகாப்பு வழங்குமாறு அரசைக் கோருவதற்கு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் வடக்குக் கடலில் இடம்பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து இந்தக் கோரிக்கையை அரசிடம் சமர்ப்பிக்க கண்காணிப்புக் குழு தீர்மானித்துள்ளது.

கண்காணிப்புக் குழு உறுப்பினர்களுக்கு அரசு ஏற்கனவே சாதாரண காப்புறுதி வசதியைச் செய்து கொடுத்துள்ளது. ஆனால், மேற்படி சம்பவத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புச் செயலர் இன்று தென்மராட்சிக்கு!

யாழ்ப்பாணம்,ஜூலை21

தென்மராட்சி நிலைவரம் குறித்து நேரில் கண்டறிவதற்கென பாதுகாப்பு அமைச்சுச் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல ஆகியோர் இன்று அங்கு செல்கின்றனர். காலையில் மறவன்புலோ, தச்சன்தோப்பு ஆகிய இடங்களில் விவசாயச் செய்கைக்கு தடைசெய்யப்பட்டுள்ள நிலங்களைப் பார்வையிடும் இவர்கள் முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இடம்பெறும் கூட்டத்தில் பங்குபற்றுவர். (எ-3)

## விடுதலைப் புலிகளின்

## செங்கலடிப் பொறுப்பாளர் படையினரால் தாக்கப்பட்டார்

### வெள்ளியன்று சம்பவம்

மட்டக்களப்பு,ஜூலை21

மட்டக்களப்பு - செங்கலடிப் பகுதியில் வைத்துத் தமது உறுப்பினர் ஒருவர் படையினரால் தாக்கப்பட்டதாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அரசியல்துறையினர் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் செங்கலடிப் பொறுப்பாளர் தீக்குமரனே தாக்கப்பட்டவராவார். நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



படிப்படியா என்றுதான் சொல்கிறாரே தவிர ஒவ்வொரு படியும் எவ்வளவு உயரம் என்று சொல்லவில்லை பார்த்தியளோ....

## தீவகக் கடற்பரப்பில் 9மீனவர் நேற்று கைது!

### கண்காணிப்புக் குழுவிடம் முறையீடு

யாழ்ப்பாணம்,ஜூலை21

ஊர்காவற்றுறை, தம்பாட்டிக் கடலில் நேற்றுக்காலை 6 மணியளவில் மீன்பிடிக்கச் சென்ற 9 மீனவர்கள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குமாரவேலு டக்ளஸ், ஞானசேகரம் தயாளன், கணேந்திரன் குணராசா, ஞானசேகரம் மதனகுமார், ஞானசேகரம் கேதீஸ்வரன், சுந்தரம் கதிர்சுந்தரம், முத்துத்தம்பி கோமகன், பெரியதம்பி காண்டீபன், திருநாவுக்கரசு மனோகரன் ஆகியோரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழமைபோல் நேற்றும் அவர்கள் இரு வள்ளங்களில் மீன்பிடிக்கச் சென்றனர் என்றும் - சாந்திபுரம் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்தவேளை அவர்கள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் - முறைப்பாட்டில் தெரிவிக்

(12ஆம் பக்கம் பார்க்க)

# விளையாட்டு

## 'பொன் அணிகள் போர்'

# பற்றிக்ஸ் அணி வெற்றி!

யாழ்ப்பாணம்,ஜூலை21

'பொன் அணிகளின் போர்' (Battle of the Golds) என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணக் கல்லூரி - சென்.பற்றிக்ஸ் கல்லூரி இடையிலான கிரிக்கெட் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

நேற்றுக்காலை 9 மணிக்கு ஆட்டம் ஆரம்பமானபோது 6 விக்கெட் இழப்பிற்கு 121 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்த சென்.பற்றிக்ஸ் அணி தனது முதல் இனிங்ஸ் முடிவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ந்து தனது இரண்டாவது இனிங்ஸை ஆட ஆரம்பித்தது யாழ்ப்பாணக் கல்லூரி. 112 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அந்த அணி வீரர்கள் அனைவரும் ஆட்டமிழந்தனர்.

அந்த அணிக்காக எஸ்.டினேஷ் குமார் 36 ஓட்டங்களையும், ஜே.நிரோஷன் 25 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

ஆட்டத்தில் வெற்றிவாய்ப்பு சென்.பற்றிக்ஸ் அணியின் பக்கம் சாய்ந்தது. 62 ஓட்டங்களை மட்டும் பெற்றால் ஆட்டத்தை வென்றுவிடலாம் என்ற நிலை அந்த அணிக்கு.

இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த அந்த அணி வீரர்கள் 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து இலகுவாகத் தமது வெற்றி இலக்கை அடைந்தனர். அணி வீரர் ஜி.செல்வின் லொயிட் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களைப் பெற்றார்.

யாழ்ப்பாணக் கல்லூரி வீரர் வை.துஜன் 42 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து அந்த 4 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்.

இறுதியில் சென்.பற்றிக்ஸ் அணி 6 விக்கெட்டுக்களால் யாழ்ப்பாணக் கல்லூரி அணியைத் தோற்கடித்தது.

இது சென்.பற்றிக்ஸ் அணி இந்தப் போட்டிகளில் பெறும் 27 ஆவது வெற்றி என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்கோர் விவரம்:

*முதல் இனிங்ஸ்:-*

யாழ்ப்பாணக் கல்லூரி - 105/10

சென்.பற்றிக்ஸ் - 156/10

*இரண்டாவது இனிங்ஸ்:-*

யாழ்ப்பாணக் கல்லூரி - 112/10

சென்.பற்றிக்ஸ் - 64/4

இந்த ஆட்டத்தின் நாயகனாக சென்.பற்றிக்ஸ் கல்லூரி வீரர் ஜி.செல்வின் லொயிட் தெரிவுசெய்யப்பட்டார்.

சிறந்த களத்தடுப்பாளராக யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் ஆர்.ரமணனும், சிறந்த துடுப்பாட்டக்காரராக அந்த அணி வீரர் ஜே.ராஜ்குமாரும், சிறந்த பந்து வீச்சாளராக சென்.பற்றிக்ஸ் அணி வீரர் ஜி.செல்வின் லொயிட்டும், சிறந்த சகலதுறை ஆட்டக்காரராக அந்த அணி வீரர் ஆர்.வினோதனும் தெரிவுசெய்யப்பட்டனர். (ம)

# வீரர்கள் துடுப்பாட்டம் சமநிலையில் முடிந்தது!

வலி.வடக்கு,ஜூலை21

ஸ்கந்தா மற்றும் மகாஜனாக் கல்லூரிகளுக்கிடையிலான வீரர்களின் துடுப்பாட்டம் (Battle of the Heros) நேற்று 2ஆம் நாள் ஆட்டநேர முடிவில் போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

- முதல்நாள் ஆட்டத்தில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 24 ஓட்டங்களைப் பெற்றிருந்த மகாஜனாக் கல்லூரி அணி நேற்றுக்காலை தனது ஆட்டத்தைத் தொடர்ந்தது.

நண்பகலுக்குள் மகாஜனாக் கல்லூரி அணியினர் தமது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 92 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர். இது ஸ்கந்தா அணியின் முதல் இனிங்ஸ் ஓட்டங்களை விட வெறும் 9 ஓட்டங்களே அதிகமானது.

ஸ்கந்தா வீரர் கே.கிருஸ்ணச்சந்திரா 52 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

தொடர்ந்து தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்தது ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 111 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தமது ஆட்டத்தை ஸ்கந்தா இடைநிறுத்தி, மகாஜனா தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பிக்க இடம்கொடுத்தது.

ஸ்கந்தா வீரர் ஏ.துஸ்யந்தன் இரண்டாவது இனிங்ஸில் தனது அணிக்காக 38 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். மகாஜனா வீரர் கே.அன்பழகன் [illegible] ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதன்மூலம் இந்த ஆட்டத்தில் ஆகக்கூடுதலான விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் என்ற பெருமையை அவர் பெற்றார்.

103 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் மகாஜனா தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்தது.

மகாஜனா வீரர்கள் வெகு வேகமாக ஓட்டங்களைப் பெற ஆரம்பித்தனர். கடைசி 20 ஓவர்களும் மிக விறுவிறுப்பாக இடம்பெற்றது. ஒரு கட்டத்தில் மகாஜனா வெற்றிபெறும் என்ற எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது.

ஆனால், இறுதிநேரத்தில் வெளிச்சம் போதாமை காரணமாக இரவு 7 மணிக்கு ஆட்டம் நிறுத்தப்பட்டது. அப்போது மகாஜனா 6விக்கெட் இழப்பிற்கு 101 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

மகாஜனா வீரர் கே.அன்பழகன் 25ஓட்டங்களைப் பெற்றார். ஸ்கந்தா வீரர்கள் கிருஸ்ணச்சந்திரா, ஏ.சதீஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இறுதியில் ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

ஸ்கோர் விவரம்:

முதல் இனிங்ஸ்:-

ஸ்கந்தா - 83/10

மகாஜனா - 92/10

இரண்டாவது இனிங்ஸ்:-

ஸ்கந்தா - 111/8

மகாஜனா - 101/6

இந்த ஆட்டத்தின் நாயகனாக மகாஜனாக் கல்லூரி வீரர் கே.அன்பழகன் தெரிவுசெய்யப்பட்டார்.

சிறந்த பந்து வீச்சாளராக மகாஜனாவின் கே.அன்பழகனும், சிறந்த துடுப்பாட்ட வீரராக ஸ்கந்தா வீரர் க.கஸ்ரோவும், சிறந்த தடுப்பாளராக மகாஜனா வீரர் எஸ்.ரவிசாந்தும் சிறந்த சகலதுறை ஆட்டக்காரராக கே.கிருஷ்ணச்சந்திராவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். (ம-86)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்பல்கலைக்கழக விளையாட்டு அவையின் ஏற்பாட்டில் கழகங்கள் மற்றும் பாடசாலைகளுக்கிடையில் பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் நடத்தப்பட்டுவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாளை திங்கட்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியும், அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியும் மோதுகின்றன.(ம-3)

★ ★ ★

ஹற்றன் நஷனல் வங்கியின் ஏற்பாட்டில் கழகங்கள் மற்றும் பாடசாலைகளுக்கிடையில் யாழ்.இந்துக் கல்லூரி ஆடுகளத்தில் நடைபெற்று வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு:-

☆ மாலை 4 மணி - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி.

☆ மாலை 5 மணி - சென்.ஜோன்ஸ் கல்லூரி எதிர் யாழ்.மத்திய கல்லூரி 'பி' (ம-3)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை21

சுன்னாகம் ஸ்கந்தா பழைய மாணவர் அணிக்கும் வவுனியா வடதாரகை விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான சினேகபூர்வமான கிரிக்கெட் ஆட்டம் ஒன்று ஸ்கந்தா மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளது. (எ-3)





வலி.வடக்கு மீள்குடியமர்வு தொடர்பான கூட்டம் தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

மேற்படி கூட்டத்தில் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.கரலியத்த மற்றும் எம்.பிக்களான எம்.கே.சிவாஜிலிங்கம், என்.ரவிராஜ், ஜீ.ஜீ.கஜேந்திரகுமார், மாவை சேனாதிராசா ஆகியோர் அமர்ந்திருப்பதை முதல் படங்களிலும் -

கூட்டத்தில் கலந்துகொண்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச செயலர்களை அடுத்துள்ள படங்களிலும் காணலாம். *(படங்கள்:- தேவராஜன்)*

## உரிமைகளை வலியுறுத்தி

# ஈழத்தமிழருக்காக குரல் கொடுப்பது தமிழக மக்களின் தலையாய கடமை

## சென்னை மாநாட்டில் அமைச்சர் சந்திரசேகரன்

சென்னை,ஜூலை21

ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கவேண்டிய கடப்பாடு தமிழக மக்களுக்கு உண்டு.

ஈழத்தமிழர் பிரச்சினை குறித்துப் பேச தமிழ்நாட்டு தலைவர்கள் அஞ்சுகிறார்கள். அவர்கள் ஈழத் தமிழ் மககளுக்காகக் குரல்கொடுக்க முன்வரவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் பி.சந்திரசேகரன்.

நேற்றுச் சனிக்கிழமை சென்னையில் இடம்பெற்ற உலகத் தமிழர் பேரவை மாநாட்டின் தொடக்க விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஈழத் தமிழர் பிரச்சினை என்பது பிரபாகரன் பிரச்சினையோ, புலிகள் பிரச்சினையோ அல்ல. மாறாக 35 லட்சம் தமிழர்களின் வாழ்வியல் சம்பந்தப்பட்டது. இலங்கையில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் காலவரையின்றி சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். பல லட்சம் தமிழர்கள் உலகம் முழுவதும் அகதிகளாக வாழ்கின்றார்கள். அவர்களின் எதிர்காலம் என்னவாகும்.

சீரழிந்துபோயிருக்கும் ஈழத் தமிழர்களின் வாழ்க்கை குறித்துப் பேசுவதில் என்ன தவறிருக்க முடியும். போராடி வரும் ஈழத் தமிழருக்கு தமிழ்நாட்டுத் தமிழர்களே பெரும் பலமாக நிற்க வேண்டும். ஈழத் தமிழர்கள் நன்றாக வாழவேண்டும் என்ற அனுதாபமும் அக்கறையும் தமிழக மக்களிடம் இருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டு தலைவர்கள்தான் ஈழத் தமிழர் பிரச்சினை குறித்துப்பேச அஞ்சுகிறார்கள்.

இலங்கை அரசின் சிந்தனை மாறிவிட்டது. பெரும்பாலான சிங்கள மக்களின் மனநிலையும் மாறிவிட்டது. ஆனால், ஏனோ தமிழகம் மட்டும் மாறவில்லை.

நெஞ்சுரத்துடனும் நேர்மைத் திறத்துடனும் ஈழத்தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கும் வைகோ, பழ.நெடுமாறன் போன்ற ஆயிரமாயிரம் தலைவர்கள் தமிழகத்தில் உருவாகவேண்டும் - என்றார்.

அங்கு உரையாற்றிய யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி கூறியதாவது:-

சிங்கள அரசு ஏவிய கொடூர வன்முறையே தமிழர்களை ஆயுதம் ஏந்த வைத்தது. தன்னை பாதுகாக்கவும், உரிமைக்காக போராடுவதற்கும் ஆயுதம் ஏந்துவது பயங்கரவாதம் அல்ல. இலங்கைத் தமிழர்கள் பயங்கரவாதிகள் அல்ல என்று தெரிவித்தார்.

மாநாடு இன்றும் இரண்டாவது நாளாகத் தொடர்ந்து நடைபெறும்.

முன்னதாக சென்னைப் பொலீஸார் இம்மாநாட்டுக்குத் தடை விதித்திருந்த போதிலும் -

சென்னை உயர் நீதிமன்றம், விடுதலைப் புலிகள் குறித்த எந்த வித பிரசாரங்களும் மேற்கொள்ளக் கூடாது என்ற நிபந்தனையுடன் இம் மாநாட்டை நடத்துவதற்கு அனுமதி அளித்திருந்தது. (எ-9)

# கடற்படைப் படகு மோதியதில் மீன்பிடி வள்ளம் நீரில் மூழ்கியது

## பொலிகண்டி கடலில் வியாழன் காலை சம்பவம்

கரவெட்டி,ஜூலை21

பொலிகண்டிக் கடலில் கடற்படையினர் பயணம் செய்த படகொன்று மீனவரின் பிளாஸ்டிக் படகின்மீது மோதியதில் மீன்பிடிப்படகு பெரும் சேதமடைந்து பின்னர் கடலில் மூழ்கியது.

கடந்த வியாழக்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் காங்கேசன்துறைப் பகுதியில் இருந்து பருத்தித்துறைப் பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்த கடற்படையினர், பொலிகண்டிக் கடற்கரையில் இருந்து சுமார் நான்கு மைல் தொலைவில் மீன்பிடித்துக் கொண்டிருந்த பொலிகண்டி கிழக்கு மீனவர் சங்கத்தலைவர் எஸ்.பரமநாதனின் பிளாஸ்ரிக் படகின்மேல் மோதினர்.

இதனால் சம்பந்தப்பட்ட படகு முற்றாகச் சேதமடைந்து கடல் நீர் உள்புகுந்ததை அடுத்து நீரில் மூழ்கியது. மீன்பிடிப்படகில் இருந்த மீன்களும், எஞ்சினும் சகமீனவர்களின் படகிலிருந்தவர்களால் மீட்டெடுக்கப்பட்டதுடன், சேதமடைந்த படகில் பயணம் செய்த மூன்று மீனவர்களும் காப்பாற்றப்பட்டனர்.

இச்சம்பவம் குறித்து மீனவர் சங்கத்தின் ஊடாக பருத்தித்துறை கடற்படை அலுவலகம், காங்கேசன்துறை கடற்படை தலைமையகத்திற்கும் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-70)

## அபிவிருத்தி தொண்டருக்கு!

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் 2ஆம் கட்டமாக பயிற்சி பெற்ற அபிவிருத்தித் தொண்டர்களுக்கான பரீட்சை, நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு புலோலியில் இயங்கும் பளை பிரதேச செயலகத்தில் நடைபெறும் என்றும்-

அனைத்து அபிவிருத்திப் பரிசோதகர்கள், போதனாசிரியர்கள் மற்றும் அபிவிருத்தித் தொண்டர்கள் அனைவரையும் இதற்கு சமுகமளிக்குமாறும் - பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ஒ)

## உயர் பாதுகாப்பு வலயத்தினுள்

# சட்டவிரோதமாக பிரவேசித்த 4 பேர் கைதாகி விடுதலை!

வலி.வடக்கு,ஜூலை21

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் சட்டவிரோதமான முறையில் உட்பிரவேசித்ததாக குற்றஞ்சாட்டி கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு காங்கேசன்துறைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நால்வர் மல்லாகம் மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியத்தினால் தலா 5ஆயிரம் ரூபா ஆள் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த நான்கு நாள்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்ட இவர்கள் மாவட்ட நீதிபதியின் பணிப்பின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

கைதுசெய்யப்பட்ட நால்வரையும் பிணையில் விடவேண்டும் என்று சட்டத்தரணி மு.சபாநாதன் தாக்கல் செய்த மனுவை அடுத்தே இவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்தவர்களான துரைச்சாமி சிவசோதி, விஸ்வரட்ணம் ராகவன், இராமசந்திரம் சுரேஸ், பொன்னம்பலம் பாலமுருகன் ஆகியோரே இவ்வாறு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளவர்களாவர். (எ-86)

# தமிழக முகாம்களில் தங்கியுள்ள ஈழ அகதிகளின் உறவினருக்கு விஸா

## வாஜ்பாயிடம் ஜனார்த்தனம் கோரிக்கை

புதுடில்லி,ஜூலை21

இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளைப் பார்க்க விரும்பும் ஈழத் தமிழர்களின் விஸா விண்ணப்பங்களை நிராகரிக்கக் கூடாது என்று உலகத் தமிழர் சம்மேளனத் தலைவர் டி.ஆர். ஜனார்த்தனம் பிரதமர் வாஜ்பாயிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து பிரதமர் அலுவலகத்தில் அவர் மனு கொடுத்தார்.

'இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைப் பார்க்க விரும்பும் இலங்கைத் தமிழர்களின் விஸா விணணப்பங்கள் எந்தக் காரணமும் இல்லாமல் நிராகரிக்கப்படுகின்றன. சிங்களவர்களின் விண்ணப்பங்கள் மட்டும் சாதகமாகப் பரிசீலிக்கப்படுகின்றன. தமிழர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன அல்லது தேவையில்லாமல் தாமதப்படுத்தப்படுகின்றன' என்று அவர் அந்த மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

'எனவே இலங்கைத் தமிழர்களின் விஸா விண்ணப்பங்களை நியாயமான முறையில் பரிசீலிக்குமாறு இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகத்துக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரியுள்ளார். இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியா ஆர்வம் காட்டாததால் மற்ற நாடுகள் இதில் அதிகமாகத் தலையிடத் தொடங்கிவிட்டன. இது, இந்திய நலனைப் பாதிக்கும். இலங்கைத் தமிழர்களும், உலகம் முழுவதுமுள்ள தமிழ் மக்களும இந்தியா சரியான பங்களிப்பை ஆற்றும் என்று இன்னும் நம்பிக்கையுடன உள்ளனர்' என்றும் அவர் மனுவில் குறிப்பிட்டுள்ளார். (ஓ)

# வருமானவரித் துறையின் பிடியில் அஜித், பிரசாந்த், ஜெயராம்

சென்னை,ஜூலை21

சென்னையில் திரையுலகப் பிரமுகர்கள் வீடுகளில் மேற்கொள்ளப்பட்ட வருமான வரித்துறை சோதனையை அடுத்து, நடிகர்கள் அஜித், பிரசாந்த், ஜெயராம் ஆகியோருக்கு வருமான வரித்துறை அலுவலகத்தில் நேரில் ஆஜராக உத்தரவிடப்பட்டுள்ளது.

சென்னையில் கடந்த ஒருவார காலமாக, சினிமா பிரமுகர்கள் வீடு



களில் வருமான வரித்துறை புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் திடீர் சோதனை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் திருவான்மியூரில் உள்ள அஜித்குமார் வீட்டிலும் அவரது பெற்றோர் வீட்டிலும் சோதனை நடத்தப்பட்டது. அபிராமிபுரத்தில் உள்ள அஜித்தின் மேலாளர் சுரேஸ் சந்திரா வீட்டிலும் அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

அதைப்போல, தி.நகரில் உள்ள நடிகர் பிரசாந்த் வீட்டிலும் சோதனை நடத்தப்பட்டது. நடிகர் ஜெயராம், இயக்குனர் கஸ்தூரிராஜா, தயாரிப்பாளர் ஆர்.பி.சௌத்ரி ஆகியோரது வீடுகளிலும் அலுவலகங்களிலும் அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர். சோதனைகளின் போது கணக்கில் காட்டப்படாத பணம் சிக்கியதாகத் தெரிகிறது. (ஓ)

# உலகத் தமிழர் மாநாடு புலிகளை ஆதரிக்க அல்ல!

## பழ.நெடுமாறன் பேட்டி

சென்னை,ஜூலை21

'உலகத் தமிழர் பேரமைப்பு தொடக்க விழா மாநாடு விடுதலைப் புலி ஆதரவு மாநாடு அல்ல' என்று பழ.நெடுமாறன் கூறினார்.

தமிழர் தேசிய இயக்கத் தலைவரும் உலகத் தமிழர் பேரமைப்பு தொடக்க விழா மாநாட்டு அமைப்பாளருமான பழ.நெடுமாறன் சென்னையில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

உலகத் தமிழர் பேரமைப்பு தொடக்க விழா மாநாடு சென்னை எழும்பூர் பொன்பொஸ்கோ பாடசாலைக் கலையரங்கில் நடைபெறும் என்று அறிவித்திருந்தோம்.

இந்த மாநாடு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான மாநாடு என்று பொலீஸார் கூறி இதை தடை செய்ய வேண்டும் என்று நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

உலகத் தமிழர்களை ஒன்று திரட்டும் வகையில்தான் இந்த மாநாடு நடத்தப்படுகிறது என்று நீதிமன்றத்தில் எடுத்துக் கூறினோம்.

இதைத் தொடர்ந்து பொலீஸாரின குற்றச்சாட்டை நீதிபதி ஏற்றுக்கொள்ள வில்லை. எனவே பொலீஸார் மாநாட்டுக்கு விதித்த தடை நீக்கப்பட்டுவிட்டது.

திட்டமிட்டபடி மாநாடு நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் உலக தமிழர் பிரச்சினைகளை பற்றி மட்டும் பேசுவோம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான மாநாடு அல்ல இது.

மாநாட்டில் மத்திய மந்திரிகள் கண்ணப்பன், செஞ்சி ராமச்சந்திரன், முன்னாள் அமைச்சர்கள் ராசாராம், கா.வேழவேந்தன், மதுரை ஆதீனம், டாக்டர் ராமதாஸ், நல்லகண்ணு, திருமாவளவன் உட்பட பலர் கலந்து கொண்டு பேசுகிறார்கள்'.

- இவ்வாறு பழ.நெடுமாறன் கூறினார். (ஓ)

# இஸ்ரேலிய நடவடிக்கைகளுக்கு ஐ.நா., அமெரிக்கா கடும் கண்டனம்!

லண்டன்,ஜூலை21

மேற்குக் கரையில் பலஸ்தீனத் தீவரவாதிகளின் வீடுகளை தகர்த்து, தரை மட்டமாக்கியும் -

அவர்களது நெருங்கிய உறவினர்களை காஸா பகுதிக்கு வலுக்கட்டாயமாக அனுப்பியும் -

இஸ்ரேலிய இராணுவம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைக்கு ஐநா. கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. ஒட்டுமொத்த பலஸ்தீனர்களையும் இஸ்ரேல் தண்டிப்பது தவறு என்று ஐநா. செயலாளர் நாயகம் கோபி அனான் கூறியுள்ளார்.

பலஸ்தீனத் தற்கொலைத் தாக்குதல்களைத் தான் கண்டிக்கும் அதே சமயம் இஸ்ரேலியர்களின் சுய பாதுகாப்பு என்று கூறிக்கொண்டு இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேசமயம், இஸ்ரேலின் தற்போதைய நடவடிக்கைகளை அமெரிக்காவும் கடுமையாக விமர்சித்துள்ளது. அமெரிக்க அரசின் பேச்சாளர் ஒருவர் கூறுகையில் இந்த நடவடிக்கை இஸ்ரேலின் பாதுகாப்பு பிரச்சினையை ஒரு போதும் தீர்த்துவிடப் போவதில்லை என்று தெரிவித்தார்.

தீவிரவாதிகளின் உறவினர்களை காஸா பகுதிக்கு பலாத்காரமாக அனுப்புவது மற்றும் தீவிரவாதிகளின் நெருங்கிய உறுவினர்களின் வீடுகளை தகர்ப்பது போன்ற நடவடிக்கைகளை இஸ்ரேலிய இராணுவம் இனியும் தொடர்ந்தால் மேலும் புதிய தற்கொலைத் தாக்குதல்களை இஸ்ரேல் எதிர்கொள்ள நேரிடும் என்று பலஸ்தீன விடுதலை இயக்கமான ஹமாஸ் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ)



இஸ்ரேலிய இராணுவத்தினரால் பலஸ்தீனத் தீவிரவாதி ஒருவரின் வீடு தகர்க்கப்பட்டிருக்கும் காட்சி.

# பெர்னாண்டஸ்-ஜெயலலிதா சந்திப்பு இரத்தானது


சென்னை,ஜூலை21

தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஜெயலலிதாவுடனான சந்திப்பை வெள்ளிக்கிழமை ரத்து செய்தார் மத்திய அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணாண்டஸ்.

'பொடா' சட்டத்தில் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் இருக்கும் ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோவைச் சந்திக்க வந்த ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் தலைமைச் செயலகத்தில் முதல்வரைச் சந்திப்பதாக இருந்தது. ஆனால், கடைசிநேரத்தில் இச் சந்திப்பு நடக்கவில்லை. பிற்பகல் 3.20 வரை வேலூரில் இருந்த அமைச்சர், ஹெலிகொப்டர் மூலம் சென்னை திரும்பி உடனேயே டில்லி புறப்பட்டார்.

முதல்வரைச் சந்தித்த பிறகு, தி.மு.க. தலைவர் கருணாநிதியையும் அவர் சந்திப்பதாக இருந்தது. இச் சந்திப்பும் நடக்கவில்லை. (ஓ)

# 215 பேரைக் கொன்ற பிரிட்டிஷ் மருத்துவர்!




பிரிட்டனில் தன்னிடம் சிகிச்சை பெற வந்த நோயாளிகளில் 15 பேரை விஷ ஊசி ஏற்றிக் கொன்ற குற்றத்துக்காக தற்போது சிறைவாசம் அனுபவித்து வரும் சமூக மருத்துவர் ஹரோல்ட் சிப்மன் (வயது 56) என்ற மருத்துவர் உண்மையில் 215 நோயாளிகள் வரை கொன்றிருப்பதாக இப்போது தெரிய வந்துள்ளது. இதனையடுத்து பிரிட்டனின் மிகமோசமான கொலைகாரன் என்ற பெயரை அந்த மருத்துவர் பெற்றுள்ளார்.

ஹைட் பகுதியில் பிரபல மருத்துவராகவும், சமூகத்தில் உயர்ந்த மனிதராகவும் மதிக்கப்பட்டு வந்த சிப்மென் தன்னிடம் சிகிச்சை பெற வந்த 15 நோயாளிகளுக்கு உயிரைப்போக்கும் மருந்துகளை செலுத்திக் கொன்றதற்காக 2000 ஆம் ஆண்டு ஜனவரியில் பிரிட்டிஷ் நீதிமன்றம் அவருக்கு ஒவ்வொரு கொலைக்கும் ஓர் ஆயுள் தண்டனை வீதம் விதித்தது. அவர் தற்போது ஆயுள் தண்டனைகளை ஒரே சமயத்தில் அனுபவித்து வருகிறார்.

சிப்மென் வேறு கொலைகளையும் செய்தாரா, என்பதை அறிய லண்டன் உயர் நீதிமன்ற நீதிபதியிடம் ஜேனட் ஸ்மித் தலைமையில் விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. இதன் அறிக்கை நேற்றுமுன்தினம் சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் 1974 ஆம் ஆண்டு முதல் 1998 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் 41 வயது முதல் 93 வயது வரையிலான 215 பேரை சிப்மேன் விஷ ஊசி ஏற்றி கொன்றுள்ளதாகவும் - கொல்லப்பட்டவர்களில் 171 பெண்களும் 44 ஆண்களும் அடங்குவர் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ஓ)

# சிறையில் வைகோவின் பொழுதுகள்....



வேலூர்,ஜூலை21

வேலூர் மத்திய சிறையில் 'பொடா' சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்டுள்ள வைகோவின் தகவல் தொடர்புச் சாதனமாக, அவரைச் சந்திக்கும் முக்கிய பார்வையாளர்கள் உள்ளனர்.

வைகோவை நாள்தோறும் சந்திக்கும் பிரமுகர்களிடம் அவ்வப்போதைய நாட்டு நடப்புகளை வைகோ கேட்டறிகிறார். அதேபோல் அவர்கள் மூலம பத்திரிகையாளர்களுக்கும் நாள்தோறும் தனது கருத்துகளை சொல்லத் தவறுவதில்லை.

சிறைச்சாலையில் காலை, மாலை நேர வானொலிச் செய்திகளைக் கேட்டறிகிறார். இரு ஆங்கில நாளிதழ்கள், 4 தமிழ் நாளிதழ்களை அவர் படிக்கத் தவறுவதில்லை. காலை நேரத்தில் சிறிது நேரம் நடந்து சென்று வரும் வைகோ, பெரும்பாலான நேரம் சட்டப் புத்தகங்களைப் படிப்பதில் அதிக கவனம் செலுத்தி வருகிறார். இதற்காக மாலை நேரங்களில் அவர் பார்வையாளர்களைச் சந்திப்பதையும் தவிர்த்து வருகிறார்.

கட்சிப் பிரமுகர்களிடம் அவர் ம.தி.மு.கவைப் பற்றி பொதுமக்களின் கருத்து என்னவாக இருக்கிறது என்று கேட்டறிகிறார். தன்னைக் கைது செய்தது மக்களிடம் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது? அது கட்சியின் வளர்ச்சிக்கு உதவுமா? என்பதை ஆர்வத்துடன் கேட்டறிகிறார்.

அவரைச் சந்திக்க வரும் பிரமுகர்கள் ஆப்பிள் உள்ளிட்ட பழங்கள், தண்ணீர் போத்தல் போன்றவற்றை வாங்கி வருகின்றனர். அவற்றை அவர் வாங்காது திருப்பி அனுப்பி விடுகிறார். முக்கிய பிரமுகர்கள் தருவதைத தவிர்க்க இயலாத சூழலில் அதைப் பெற்று மற்ற சிறைக் கைதிகளுக்கு வழங்குமாறு கொடுத்துவிடுகிறார்.

# மண்டேலாவுக்கு வயது 84

தென்னாபிரிக்க முன்னாள் அதிபரும் சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவருமான நெல்சன் மண்டேலா கடந்த வியாழன் தனது 84 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார்.

அவருக்கு இவ்வளவு வயதாகிவிட்டபோதும் அவர் இன்னும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறார் என்கிறார்கள் அவரது அதிகாரிகள். உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஏராளமான நிகழ்ச்சிகளில் அவர் கலந்து கொள்கிறார்.

ஜொகன்னஸ்பேர்க்கிலுள்ள அவரது அலுவலகத்துக்கு வாரந்தோறும் 2000இக்கும் அதிகமான கடிதங்கள் வருகின்றன. 20 ஊழியர்கள் அந்தக் கடிதங்களைப் பிரித்துப் படிப்பதிலும் பதில் அனுப்புவதிலும் ஈடுபட்டுள்ளனர்.

மண்டேலா முன்பைவிட தற்போது தூங்குவதற்கு அதிக நேரம் எடுத்துக் கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விண்ணில் பறக்க அனுமதி கோரும் ஹொலிவூட் நடிகர்

நியூயோர்க்,ஜூலை21

விண்கலம் மூலம் விண்ணில் பயணஞ்செய்ய அனுமதிக்குமாறு, ஹொலிவூட் நடிகர் டாம் குரூஸ் (வயது 40) 'நாஸா' விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமெரிக்க கோடீஸ்வரர் ஒருவரை ரஷ்யா விண்வெளிக்கு அனுப்பியிருந்தது. தற்போது தென் ஆபிரிக்க கோடீஸ்வரர் மார்க் ஷட்டில் வொர்த் விண்வெளிப் பயணம் மேற்கொண்டுள்ளார். மொடல் அழகி சிண்டி கிராபோர்ட்டையும் ரஷ்யா விண்வெளிக்கு அனுப்ப உள்ளது. இந்நிலையில் ஹொலிவூட் நடிகர் டாம் குரூஸ் அமெரிக்க விண்கலத்தில் பயணஞ்செய்ய விருப்பம் தெரிவித்து நாஸா நிறுவனத்துக்கு கடிதம் எழுதியுள்ளார். (ஓ-9)

# ஈராக் மீது வான் தாக்குதல்!

பாக்தாத்,ஜூலை21

ஈராக்கின் மீதான ஐநா.வான் தடையைக் கண்காணிக்கும் அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் விமானங்கள் கடந்த வியாழக்கிழமை இரவு நடத்திய குண்டு வீச்சில் 5 ஈராக்கியர் கொல்லப்பட்டு 17 பேர் காயமடைந்ததாக ஈராக் அரசு அறிவித்துள்ளது.

ஈராக் மீது தாக்குதல் நடத்தியதை ஒப்புக் கொண்ட அமெரிக்க ராணுவப் பேச்சாளர், ஈராக்கிய இராணுவத் தகவல் மையமே தாக்கி அழிக்கப்பட்டதாகத் தெரிவித்தார். (ஓ)

# 30 லட்சம் குஞ்சுகள் கருகின!

லண்டன்,ஜூலை21

பிரிட்டனில் உள்ள கோழிப் பண்ணை ஒன்றில் திடீரெனத் தீப்பற்றிக் கொண்டதில் 30லட்சம் கோழிக் குஞ்சுகள் தீயில் கருகிச் சாம்பலாகியுள்ளன.

மேற்கு பிரிட்டனில் உள்ள பிளாகபர்ன் நகரில் இருந்த கோழிப்பண்ணையிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

தீ விபத்துக்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. அதிகாரிகள் விசாரணை நடத்திவருகிறார்கள்.

இதேவேளை -

பிரிட்டனில் வாராந்தம் உணவுத் தேவைக்காக ஒரு கோடி 65 லட்சம் இறைச்சிக்கோழிகள் கொல்லப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# 2000 ஆண்டுகளுக்கு முன் கிரேக்கர் எழுதிய நூலில் தமிழ்ச் சொற்கள்

## மொழியின் தொன்மைக்கு மேலும் பல சான்றுகள்

தமிழ்மொழி பன்னெடுங்காலத்திற்கு முன்பே தனக்கென ஒரு பாரம்பரியத்தை தோற்றுவித்து வாழ்ந்தது என்பதுவும், சில மொழிகளைப் போல் வாழ்ந்து வீழ்ந்து விடாது வீறு கொண்ட மொழி என்பதுவும் விளங்கும்.

தமிழ்மொழி பழைமையைக் கணடது. பாபிலோனிய மொழியைப் போலவோ அல்லது பண்டைய எகிப்திய மொழியைப் போலவோ அழிந்து விடவில்லை. ஆக்கம் பல கண்டு இன்னும் வாழக்காண்கின்றோம்.

லத்தீனைப் போன்றோ அல்லது சமஸ்கிருதத்தைத் போன்றோ வாழ்வில் நலிந்து, கோயில்களிலும் குகைகளிலும் கரந்துறையவில்லை. அறிஞர்களின் ஆராய்ச்சியிலும் பாமரமக்கள் மத்தியிலும் வாழும் மொழியாகவும், வரலாற்று மொழியாகவும் இருககக் காண்கின்றோம்.

ஆங்கில - பிரெஞ்சு மொழிகளைப் போல் பழைமையில்லாத நிலையில்லை. இம்மொழி எத்தனையோ நூற்றாண்டு வாழ்வு கொண்டு - வரலாறு கொண்டு விளங்குகின்றது. நாகரிக மொழிகளாகக் கருதப்படும் ஆங்கில, பிரெஞ்சு மொழிகள் பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வளர்ந்து நின்ற சிறப்பைக் கொண்டுள்ளது.

சிந்தனைத் தெளிவும் சிறந்த கறபனையும் கொண்ட இம்மக்களிடையே தோன்றிய கவிதைகளும் காப்பியங்களும் பற்பல. எண்ணங்களும், எழுச்சிகளும் பல. அவர்களின் சிந்தனையில் சிந்தி நின்ற காவிய மலர்கள் மிகப் பல. வாடாத எண்ணத்திலும் வற்றாத கற்பனை ஓட்டத்திலும் கருக்கொண்ட வாழ்வு நூல்கள் பற்பல.

இத்தகைய ஏற்றம் கொண்டு என்றும் சீரிளமைத் திறத்துடன் விளங்கும் தமிழ்மொழி சொல் வளத்தில் உயிர் வளம் போல சிறந்தது. இலக்கண வரம் புடமையில் வளர் அறிவுடன் விளங்குவது. செய்யுள் வகையில் செழிப்பு மிக்கது. பண்பாட்டுச் சிறப்பில் பெரியது எனக் கலாநிதி ச.அகத்தியலிங்கம் தான் எழுதிய 'திராவிட மொழி' என்னும் நூலில் தொகுத்துக் கூறும் கருத்து தமிழ் மொழியின் பழம பெருமைக்குச் சிறப்புச் சேர்ப்பதாகும்.

தமிழ்மொழி தரணி கண்ட முதல மொழி மாந்தர்கள் தங்கள் உள உணர்வுகளை வெளியிட முயன்ற பொழுது வெளிவந்த ஒலி ஓசை தமிழாகவே ஒலித்தது. இதை நம் புரட்சிக் கவிஞர்

*'புனல் சூழ்ந்து வடிந்து போன*
*நிலத்திலே "புதிய நாளை"*
*மனிதப் பைங் சூழ் முளைத்தே*
*வகுத்தது! மனித வாழ்வை*
*இனியநற்றமிழே நீ தான்*
*எழுப்பினை"*

- எனப் பாடி பெருமிதம் அடைகின்றார்.

தமிழும் தமிழர்களும் மத்திய ஆசியாவிலிருந்து வந்தவர்கள். - மத்திய தரைக் கடற்பகுதியிலிருந்து வந்தவர்கள் என்பதெல்லம் சான்றுகள் அற்றவை. உண்மைக்கு முற்றும் புறம்பான கூற்றுகளாகும். ஏனெனில் இந்து சமுத்திரத்தினால் அமுக்கப்பட்டுள்ள குமரி கண்டமே முதல் தோன்றிய பூமியாகும்.

தமிழ தென்னாட்டுக்குத் தெற்கே மூழ்கிக்கிடக்கும் தென்கண்டத்தின் தென்கோடி நாடான தேன்பாலில் தோன்றிய தேன் மொழியே. அதனால அதைத் தோற்றி வளர்த்த தமிழன் பிறந்தகமும் அத்தென்புலமே என மொழி ஞாயிறு ஞா.தேவநேயன் கூறுகிறார்.

தமிழர் மத்தியதரைக் கடற்கரைப பகுதியிலிருந்து வந்தவர்கள் என்பது ஒரு கோட்பாடு. இது ஒரு போலிவாதம். கி.மு.10,000 ஆண்டுகளுக்கும முன்ணர் பெரும் பனிக்காலத்தில் (The Great Ice Age) ஐரோப்பாக் கண்டம் முழுவதும் கிலோ மீற்றர் உயரத்தில் பனி மூடிக்கிடந்தது என்ற உண்மையை மறந்துவிட்டுப் பல போலிக் கருத்துக்களைக் கூறிவருகின்றனர்.

### ஐரோப்பாவில்

மானிடர் பெரும்பாலும் ஐரோப்பாவில் குடியேறிய காலம் கி.மு. 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு பின் என்பது இன்று உண்மையான செய்தியாகிவிட்டது. ஐரோப்பாவில் யாருமே மண்ணின மைந்தர்கள் இல்லை. அனைவரும் குமரி கண்டத்திலிருந்து இந்தியா, ஆபிரிக்கக கண்டங்கள் வழியே பல்வேறு காலங்களில், பல்வேறு முறைகளில் குடியேறியவர்களே என அறிஞர் சாத்தோர் சேகரம் தான் எழுதிய உலகளாவிய தமிழில் கூறுகிறார்.

'கிழக்காபிரிக்கா, மத்திய தரைக் கடல், கிழக்குத் தீவுகள், இந்தியா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய பெரிய நிலப்பரப்பு ஒன்று இந்தியப் பெரும் கடலில் இருந்தது. அது கடலில் மூழ்கிப்போயிற்று. அங்கேதான் மனித இனம் தோன்றுவதற்கே அடிப்படையான பெருங் குழுவினர் தோன்றியிருந்தனர். அவர்கள் கறுப்பு - மங்கிய கறுப்பு நிறங்களாக இருந்தனர் என "Out line of History" என்ற நூலில அதன் ஆசிரியர் எச்.ஜி.வெல்ஸ் கூறியுள்ள கருத்துடன் மனிதன் தோற்றம் மத்திய தரைக்கடல் பிரதேசம் என்பது அடிப்பட்டுப் போய்விடுகிறது.

"இந்து சமுத்திரத்தால் அமுக்கப்பட்டுள்ள நாடே மனித இனத்தின் தொட்டிலாகும். அதன் மொழி தமிழாகும்" என அறிஞர் சி.எம்.மொனஹான் தான் எழுதிய ஆய்வுக் கட்டுரையில் கூறியுள்ளார்.

"குமரிமுனைக்கு தெற்கே உள்ள நடுக்கோட்டுக்கு இரு மருங்கிலும் இருந்த நிலப்பகுதிகளே மக்கள் வாழ்வதற்கான உரிய நிலையை முதற்கண் அடைந்தன. அங்கேதான் மக்கள் தோன்றி வளர்ந்து நாகரிகத்தை வித்திட்டார்கள் [illegible] அறிஞர் கொக்கல். இதுவரை [illegible]டைத்த சான்றுகளையும் ஆய்வு அறிக்கைகளையும வைத்து ஆய்வு செய்தால் குமுறிய கடலுக்கு இரையாகிய குமரிக்கண்டமே தமிழும் தமிழர்களும் பிறந்ததாகும்.

அன்றைய குமரியில் 49 நாடுகள் இருந்தன. அப்பகுதி முழுவதும் தமிழ் மொழி வழங்கி வந்துள்ளது. முதலாம் இரண்டாம் தமிழ்ச் சங்கங்கள் அப்பகுதியிலேயே இருந்தன. இப்பூபாகம கடலால் விழுங்கப்பட்டதால் இன்றுள்ள மதுரையில் மூன்றாம் தமிழ்ச் சங்கம் அமைத்து தமிழ் வளர்த்ததாக தமிழர் வரலாறும் கர்ண பரம்பரைக் கதைகளும் கூறுகின்றன.

### பிரளயங்கள்

குமரிக்கண்டம் கடலில் மூழ்கியதும் இலங்கைத் தீவு தனியாகப் பிரிந்ததும் ஒரு பிரளயத்தில் அல்லது பல பிரளயங்களில் நடந்திருக்க வேண்டும் எத்தனை பிரளயங்கள் எவ்வெக்காலங்களில் நிகழ்ந்தன என்ற கேள்விகளுக்கு அறிஞர் சிதம்பரனார் தனது 'சங்க கால வரலாறு' என்னும் நூலில் விடை தருகிறார். அதன்மூலம் தமிழ்மொழியின் தோற்றத்தையும் தமிழ்ச் சங்கங்களின் ஆரம்பகாலங்களையும் சுமாராக அறிந்து தெரிந்து தெளிய முடிகின்றது.

*"தொன்று நிகழ்ந்து அனைத்து*
*முணர்ந்திடும் சூழ் கலைவாணர்களும்*
*- இவள் என்று பிறந்தவள் என்றுணராத இயல் பினளாம் எங்கள் தாய்"*

என்ற மகாகவி பாரதியின் ஏக்கத்திற்கும் விடை கிடைத்துவிடும்.

, சங்ககாலம் கி.மு. 30,000 ஆண்டுகள் முதல் கி.பி.235 ஆண்டு வரை நீளும் இக்கால ஒழுங்கு பின்வருமாறு அமைகின்றது.

கி.மு. 30,000 ஆம் ஆண்டு முதல கி.மு. 16,500 ஆம் ஆண்டு வரை பஃறுளி ஆற்றுக்கரையிலிருந்த தென் மதுரையில் தமிழ்ச்சங்கம் ஆரம்பித்து வளர்ந்த காலமாகும். பஃறுளி என்பது குமரி கண்டத்தில் ஓடிய ஆறாகும். இச்சங்கத்தை ஆரம்பித்து நடத்திய மன்னன் முதியன் நிலந்தரு திருவிட் டாண்டியனாவான். இவன் சந்ததியினர் நீண்டகாலம் இப்பகுதியை ஆட்சி செய்தார்கள். வான சாஸ்திரத்தின் படி கி.மு.30,000 தொடக்கம் 16,500 வரையான காலப்பகுதி கி.மு. 8,576க்கு முந்திய 'மனுவந்திர' காலத்தில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

கி.மு.16,500க்கு முன் ஒரு தமிழ்ச் சங்கம் இருந்தது என்றால் தமிழ்மொழி மிகத் தொன்மையானது மட்டுமல்ல, அம்மொழியைத் தோற்றுவித்து வளர்த்த தமிழர்களும் மிகமிகத் தொன்மை வாய்ந்தவர்கள் என்பது தெளிவாகின்றது.

கி.மு.16,500 முதல் கி.மு. 16,000 வரையுள்ள 500 வருடங்கள் குமரி கண்டத்தை ஆபிரிக்க நீக்கிரோக்கள் ஆட்சி செய்தார்கள். உடுக்கண்ணன், மறைக் கண்ணன், அறிவிடமாலி, திருப்புறத்துக்கன் முதலிய ' பெயர்கள் காணப்படுகின்றன.

கி.மு. 14,500 முதல் 14,490 வரை மற்றொரு பெரிய தமிழ் சங்கம் மகேந்திரமலையில் இறையனாரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதை மகேந்திரமலைத் தமிழ்ச் சங்கம் என அழைத்தார்கள்.

கி.மு. 14,490 - 14,058 வரை குமரிக்கண்டத்தை மங்கோலியர் ஆட்சி செய்தார்கள். சிங்கமுகன், தாஞ்சகன், பானுகோபன் ஆகியோர் தலைமையில் ஆட்சி நடைபெற்றது.

**பூ.ம.செல்லத்துரை**

கி.மு. 14,058 ஆம் ஆண்டுப் பகுதியில் முருகவேள் என்ற பெயர் கொண்ட மன்னன் சூரபத்மனை வெற்றி கொண்டான். இவ்வெற்றியின் ஞாபகார்த்தமாகவே முருகவேளின் உருவச் சிலைகள் பல இடங்களில் நிறுவப்பட்டன. பிற்காலத்தில் அவை முருகவேளின் ஆலயங்களாக மாறின. இதைத் தொடர்ந்து முருக வழிபாடு ஒரு தனி வழிபாடாகியது. முருகன் தலைமையில் கதிரைமலையில் (இன்றைய கதிர்கா மத்தில்) ஒரு தமிழ்ச் சங்கம் இருந்ததாகத் 'தமிழ் விடுதூது' கூறுகிறது.

கி.மு.14,058ஆம் ஆண்டில் முதலாவது பிரளயம் ஏற்பட்டது. இக்காலத்தில் குமரவேள் தன் தலைநகரைத் திருச்செந்தூருக்கு மாற்றி - அங்கும் தமிழ் சங்கத்தைக் கூட்டினான்.

கி.மு.14,004-19,564ஆம் ஆண்டு வரை குமரக்கண்ட வரலாற்றில் ஒரு முக்கிய பகுதியாகும். இக்காலத்தில் தான் குமரி ஆற்று தென்குமரித் தமிழச் சங்கம் மிகப் பெரிய தமிழ்ச் சங்கமாக உருவாகியது. கி.மு. 9,564 ஆம் ஆண்டில் மற்றுமொரு பிரளயம் ஏற்பட்டது. இப்பிரளயத்தில் குமரிக்கண்டத்தின் மற்றும் ஒரு பெரும் பகுதி கடலில் மூழ்கியது.

### இயக்கர் ஆட்சி

கி.மு.1,956 முதல் 3,105 வரையுள்ள காலத்தில் இயக்கர்களின் ஆட்சி ஏற்பட்டது. இவர்கள் இராவணனின் முன்னோர்களாவர்.

கி.மு. 7500 ஆம் ஆண்டில் முதுகுடுமி பெருவழுதி என்னும் மன்னன் இயக்கரைத் தோற்கடித்து ஆட்சியை மீட்டான்.

கி.மு.7500-6900 ஆண்டளவில் மற்றுமொரு பெரும் தமிழ்ச் சங்கம் இந்திரனால் நிறுவப்பட்டது.

கி.மு.6900-6805 வரையுள்ள பகுதியில் மீண்டும் இயக்கர்கள் குமரி நாடு முழுமையையும் தமது ஆட்சிக்குள் கொண்டுவந்தார்கள்.

கி.மு.6805-3,105 வரை உள்ள காலம் இடைச்சங்க காலமாகும். இக்காலத்தில் தாமிரபரணி ஆற்றுக் கரையில் கபாடபுரம் அமைந்திருந்தது. இங்கே பாண்டிய மன்னன் முடிமாறன் ஒரு பெரிய தமிழ்ச் சங்கத்தைக் கூட்டினான். கி.மு. 3105 இல் துவாரகைக் கோமான் தென்னாட்டின் மீது படை எடுத்தான். கிட்டத்தட்ட இதேகாலத்தில் தான் மகாபாரதம் ஏற்பட்டது.

கி.மு. 2387 - 2939 காலப்பகுதிகளில் மற்றுமொரு பிரளயம் ஏற்பட்டது. இதன் மூலம் குமரிக்கண்டத்தின் பல பகுதிகள் கடலில் மூழ்கின.

கி.மு. 1915 - 1715ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் திருப்பரங்குன்றத்தில் தென்மதுரைத் தமிழ்ச் சங்கம் என்ற பெயரில் தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டது.

கி.மு. 1915 - 1715ஆம் ஆண்டில் குமரிக்கண்டத்தில் இறுதிப் பிரளயம் ஏற்பட்டது. கி.மு. 1715 - கி.பி.23 வரையுள்ள காலப்பகுதி கடைச்சங்க காலம என அழைக்கப்பட்டது.

தமிழர் "பதிபெழு அறியாப் பழங்குடியினர்" என இளங்கோவடிகள் கூறுகின்றார் அதற்கு உரை எழுதவந்த அடியார்க்கு நல்லார், "படைப்புக்காலம் தொட்டே வாழும் குடியினர்" என்றார்.

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடியினர்" என்றார் ஐயனாரித்தர்.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கிரேக்கர்கள் இந்தியாவைப் பற்றி எழுதிய குறிப்பில் பல தமிழ்ச் சொற்கள் காணப்படுகின்றன. 23ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய பிராக்கல் வெட்டுக்கல் தமிழ்மொழியிலே காணப்படுகின்றது.

### வால்மீகி காலம்

2400ஆம் ஆண்டுகளுக்கு முன் பாணினி காலத்தில் தமிழ் நற்றுணை என்ற நூல் தோன்றியுள்ளது. வால்மீகி காலத்தில் தமிழ் அகமும், புறமும் தோன்றியதுடன் வால்மீகி இராமாயணத்தில் தமிழ் வளர்த்த பாண்டியர் பற்றிய குறிப்புகள் உண்டு.

உலகில் இலக்கியவளம் சார்ந்த பழம் பெரும் மொழிகளான கிரேக்கம், எபிரேயம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் பல தமிழ்ச் சொற்கள் உண்டு என மொழி அறிஞர் றைபின் டெவிஸ கூறுகிறார்.

3500 ஆண்டுகளுக்கு முந்தியது என அறியப்படும் நூல்களுள் அகத்தியமும் ஒன்று. இந்நூல் 5000, 7000, 9000 ஆண்டுகள் பழமையுடையது எனக் கூறுகிறார்கள் ஆய்வாளர்கள்.

3000ஆம் ஆண்டுகளுக்கு முன்னுள்ள நூல்களில் நமக்குக் கிடைத்துள்ள நூல் தொல்காப்பியம் மட்டுமே ஆகும். இந்தத் தொல்காப்பியரே தமக்கு முன் பல இலக்கண நூல் இருந்ததாக "என்மனார் புலவர்" "யாப்பென மொழி யாப்பறிப் புலவர்" "தோலென மொழி தொன்மொழிப் புலவர்" எனக் கூறியதிலிருந்து -

தமிழ்மொழி தோன்றிய காலம் அவராலும வரையறை செய்ய முடியாதிருக்கிறது என்பது புலனாகின்றது.

சிந்துவெளி மக்கள் திராவிடர்கள. அவர்கள் திராவிட மொழியையே பேசினார்கள். திராவிட மொழிக்கும் தமிழ் மொழிக்கும் தொடர்புண்டு. மொழிகள எல்லாவற்றிலும் தமிழ் மொழியே மிகப் பழையது என வணக்கத்துக்குரிய கெறஸ் பாதிரியார் கூறுகின்றார்.

*(நன்றி: சுடர் ஒளி)*

# போலி 'விஸா' தயாரித்தவர் பொலீஸாரால் கைது!

கொழும்பு,ஜூலை21

வெளிநாடுகளுக்கான போலி 'விஸா' ஆவணங்களைத் தயாரிக்கும் மோசடி தொடர்பாக மிரிகாப பொலீஸார் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

பொலீஸ் புலன் விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த தகவலை அடுத்து நடத்திய தேடுதலின் போது இந்த நபர் கைதுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சந்தேக நபரிடம் இருந்து இறப்பர் முத்திரைகள், ஸ்ரிக்கர்கள், ஐந்து கடவுச்சீட்டுக்கள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

இத்தாலி, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கான விஸாக்களை போலியாகத் தயாரிப்பதற்கு இந்த ஸ்ரிக்கர்கள் உபயோகிக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. இதுபோன்று நாடுகளுக்கு ஆள்களை அனுப்பும் போர்வையில் சந்தேக நபர் நீண்டகாலமாக மோசடி செயல்களில் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது. (ஒ-9)

# படகு, இயந்திரம் வாங்க மீனவருக்கு சமாசம் உதவி

குருநகர்,ஜூலை21

பருத்தித்துறையில் உள்ள அஜன்மின் வள்ளச்சாலையில் கட்டப்பட்டு வரும் புதிய நுப்புக் கண்ணாடிப்படகுகளை யாழ்மாவட்டத்திலுள்ள கடற்றொழிலாளர்களுக்கு கடன் அடிப்படையில் வழங்கும் நடவடிக்கை வடமாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தலைவர் சி.தவரட்ணம் தெரிவித்தார்.

ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான இவ்வள்ளங்களை வாங்க விரும்பும் கடற்றொழிலாளர் தாம் சார்ந்த கடற்றொழிலாளர் சங்கங்கள் ஊடாக தமது விண்ணப்பங்களை சமாசத்துக்கு அனுப்பி வைக்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேசமயம் கடற்றொழிலாளர்களுக்கு 8 குதிரைச் சக்தி வலுக்கொண்ட படகு இயந்திரங்கள் சமாசம் மூலம் கடன் அடிப்படையில் வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வங்கியில் 25 ஆயிரம் ரூபாவை வைப்பிலிடுவதன் மூலம் இந்த இயந்திரங்களை மீனவர்கள் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் -

இதற்கான முழுப் பணத்தையும் இரண்டு வருடங்களில் வட்டியுடன் செலுத்த முடியும் எனவும் -

செலுத்தும் பணத்தொகைக்கு, உரிய கடற்றொழிலாளர் சங்கங்கள் பிணையாளராகச் செயற்படும் எனவும் -

வடமாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.தவரட்ணம் மேலும் தெரிவித்தார். (ஒ-51)

# யுத்த நிறுத்த உடன்பாட்டுக்கு அனைவரும் கட்டுப்படவேண்டும்

## சமாதான ஆதரவுக்குழு கோரிக்கை

யுத்தநிறுத்த உடன்பாட்டுக்கு கட்டுப்பட்டு நடக்கவும் யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவினரின் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் சகல தரப்பினரிடமும் சமாதான ஆதரவுக்குழு கோரிக்கை விடுத்திருக்கிறது.

12 முக்கிய பிரமுகர்கள் கையெழுத்திட்டு விடுத்திருக்கும் அறிக்கை ஒன்றிலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

சுனிலா அபேசேக்கர, சுனில் பெஸ்டியன், ராதிகா குமாரசாமி, சுனந்த தேசப்பிரிய, கேதீஸ்வரன் லோகநாதன், பாக்கியசோதி சரவணமுதது ஆகியோரும் கையெழுத்திட்டவர்களில் அடங்குவர்.

கடற்படையின் சட்டபூர்வ கடமைகளைப் பாதிக்காதவாறு தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கிடையே புலிகளின் படகுகள் சட்டபூர்வ பயணங்களை மேற்கொள்ள வழிவகுக்கும் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு திட்டம் வகுக்கப்படவேண்டிய அவசரத்தையே இரணைதீவு சம்பவம் உணர்த்துகிறது.

இதற்காக யுத்த நிறுத்த உடன்படிக்கையின் விதி 43 பரஸ்பர உடன்பாட்டின் பேரில் திருத்தப்படவோ அல்லது மாற்றியமைக்கப்படவோ வேண்டும் என்று நாம் கூறுகிறோம். - இவ்வாறு அறிக்கை கூறுகின்றது. (ஒ)

உதயன்

## முஸ்லிம்களின் தலைமை

ஸ்ரீலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு மேலும் வலுச்சேர்க்கும் விதத்தில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைதான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும் தமிழ்த் தேசியத் தலைவர் பிரபாகரனுக்கும் இடையில் கைச்சாத்தான ஒப்பந்தம்.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நல்ல முயற்சியில் முஸ்லிம்களின் நலனும் உரிய முறையில் பேணப்படவேண்டும் என்ற நல்லெண்ணத்தோடுதான், முஸ்லிம் மக்கள் மத்தியில் பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற முஸ்லிம் காங்கிரஸோடு ஓர் இணக்க நிலையை ஏற்படுத்தத் தலைவர் பிரபாகரன் விழைந்தார் என்பது தெளிவு.

ஆனால், தமது அமைப்புக்கும் மக்களுக்கும் வழங்கப்பட்ட இந்த உயர்ந்த ஸ்தானத்தை - நிலையை - முஸலம்களின் தலைமைத்துவம் தவறாகப் பயன்படுத்த முயலகின்றதோ என்ற சந்தேகத்தைத் தொடர்ந்து இடம்பெறும் சம்பவங்கள், நிகழ்வுகள், வெளியாகும் அறிக்கைகள், பேச்சுக்கள் போன்றன தமிழர் தரப்பின் மனதில் ஏற்படுத்தத் தொடங்கியிருக்கின்றன என்பது கண்கூடு.

தமிழர் தரப்பிலிருந்து முஸ்லிம்களைத் தனி இனக் குழுவாகப் பிரித்துப் பார்த்து, அதற்குத் தானே தலைமை தாங்குவதாகக் கூறிக்கொள்ளும் முஸ்லிம் காங்கிரஸ், தமிழர் தங்கள் உரிமைகளுக்காக நடத்திய வீரம்மிக்க விடுதலைப் போராட்டத்தையும் அதற்காகச் செய்த அளபபரிய - எண்ணிப்பார்க்கமுடியாத - உயிர், உடைமைத் தியாகங்களையும் கிள்ளுக்கீரையாகக் கருதிவிடக்கூடாது என்பதுதான் தமிழர்களின் மனத்தாங்கல்.

இந்தத் தியாகத்தில் குளிர்காய நினையாமல், அவர்கள் முயற்சிக்கு உரமூட்டி - உயிரூட்டி - உரிமைக்கான இந்த விடுதலைப் போராட்டத்தை முன்னகர்த்த உதவுவதுதான் மொழியால் - வாழ்க்கையால் - தமிழர்களோடு பின்னிப் பிணைந்து இணைந்து நிற்கும் முஸ்லிம்களின் கடமையும் பொறுப்பும் என்று தமிழர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

இந்த இரண்டு தசாப்த கால விடுதலைப் போராட்ட வேளையில் ஈழத்தமிழர்களை அடக்கி, ஒடுக்கி, அழித்து அராஜக ஆட்சி புரிந்தது சிங்கள அரசுகள். அந்தக் காலஙகளல் எல்லாம் அந்த அரசுகளுக்கு முண்டுகொடுத்து, ஆட்சியைச் சரியவிடாமல் பாதுகாத்து, அதில் பங்கெடுத்து, தனது மக்களின் நலன் மட்டும் பேணுவதே குறியாய் இருந்த முஸ்லிம் தலைமைகளை தமிழர்கள் இலகுவில் மறந்துவிடத் தயாராக இருக்கின்றார்கள்.

அந்த முஸ்லிம் தலைமைகள் கொடுத்த முண்டினால்தான் இந்தச் சிங்கள அரசுகள் தங்களைத் தக்க வைகதுக்கொண்டு தமிழர் தலைமீது சவாரிவிட்டன. அதையும பொருட்படுத்தாமல் விட்டுவிட ஈழத்தமிழர்கள் தயார் - முஸ்லிம்கள் தங்களின் சகோதரர்கள் என்ற பிணைப்பு, இறுக்கம் காரணமாக.

ஆனாலும், இனமோதல் காலத்தில் தமிழர் - சிங்களவர் தரப்புகள் மோதிக்கொண்டபோது இடையில் இலாபம் தேடிய முஸ்லிம் தலைமையும் இப்போது சமாதான முயற்சிகளின் மத்தியிலும், அதன் முன்னேற்றத்துக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் இடையில் பிடுங்கி லாபம் தேட முயற்சிக்கின்றனவோ என்ற சந்தேகத்தை தமிழர்கள் மத்தியில் தோற்றுவிக்காத நிலையில் நடந்துகொள்ளவேண்டும்.

காடுவெட்டி, களனியாக்கி, உழுது, உரமிட்டு, நாற்று நட்டு, நீர்ப்பாய்ச்சி, களையெடுத்து, பயிர் வளர்த்து, அறுவை செய்து, போரடித்து, விளைச்சலை சாக்கில் கட்டும் சமயம் -

இதுவரை உழைப்பில் பங்குபற்றாமல் வெறும் பார்வையாளனாகக்கூட இராமல் தொந்தரவாளனாகவும் இருந்துவிட்டு - விளைச்சலில் பங்கு கேட்பதுபோல முஸ்லிம் தலைமைகள் நடந்துகொள்ளக்கூடாது.

இலங்கையில் இப்போது இரண்டு இறைமையுள்ள - வரையறுக்கப்பட்ட பிரதேசங்கள், ஆட்சிகள், நிர்வாகங்கள், படைகள் இருக்கின்றன என்பது தெளிவு. அதில் சந்தேகம் இல்லை.

ஒன்று ஸ்ரீலங்கா அரசினுடையது. மற்றையது விடுதலைப் புலிகளுடையது.

அரச நிர்வாகப் பிரதேசத்தில் அரசின் சட்டம், பொலீஸ், வரி என்பன நடைமுறையில். அதேபோன்று புலிகளின் நிர்வாகப் பகுதியில் புலிகளின் விதிமுறைகள் அமுலில்.

இவ்வாறு கிழக்கு மாகாணத்தில்கூட அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசம், புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசம் என்று வரையறை உண்டு.

புலிகளின் பிரதேசத்தில் புலிகள் அறவிடும் வரியைக் காட்டி, "எங்கள் மேலாதிக்கம் உள்ள பிரதேசங்களில் தமிழர்கள் வரி செலுத்தவேண்டும் என்று முஸ்லிம்கள் பேசத் தலைப்பட்டால்...." என்று அரச படைகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் முஸ்லிம்களின் சார்பில் ரவூப் ஹக்கீம் கூறுவது வெறும் விதண்டாவாதம. தானும் ஒரு பிரதேசத்தைக் கைப்பற்றி, நிர்வாகம் நடத்துவது போன்ற தொனியில் அவர் பேச, செயற்பட முயல்வது அவரது உள்நோக்கம் குறித்துத் தமிழர் தலைமைக்கு பலத்த சந்தேகத்தை, எச்சரிக்கை உணர்வைத் தோற்றுவித்திருப்பதையும் ஒதுக்கிவிடமுடியாது.

முஸ்லிம்களின் நலன் என்ற பெயரில் அந்தச் சமூகத்தையே நட்டாற்றில் கொண்டுபோய்விட முயலும் இத்தகைய தலைமைகள் குறித்து முஸ்லிம்கள் நேரத்துடனேயே எச்சரிக்கையாய் நடந்துகொள்வது நல்லது.

ஜனாதிபதி செயலகம் சம்பந்தப்பட்ட

## வாகனங்கள் கொள்வனவு குறித்து அமைச்சரவைக்குத் தவறான தகவலாம்

கொழும்பு,ஜூலை21

ஜனாதிபதி செயலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களின் தொகை தொடர்பாக அமைச்சரவையை ஜனாதிபதி தவறாக வழி நடத்தியிருக்கிறார் என்று அமைச்சர்கள் உபகுழு தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி தலைமையிலான அமைச்சர்கள் உபகுழுவின் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

35வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டன என்று ஜனாதிபதி ஆரம்பத்தில் கூறினார். பின்னர் 49 வாகனங்கள் என்று கூறி 50 வாகனங்களின் பட்டியலைச் சமர்ப்பித்தார்.

அவை விசேடமாகத் தயாரிக்கப்பட்ட புதிய வாகனங்கள் என்று கூறப்பட்டது. ஆனால் பிரிஸ் பேன், ஜகர்த்தா, ஹொங் கொங் ஆகிய இடங்களில் இருந்தே அவை அனுப்பப்பட்டிருக்கின்றன.

இந்த வாகனங்களின் உண்மையான பெறுமதி குறித்து சந்தேகம் நிலவுகிறது. பொது மக்களின் நன்மை குறித்து இது தொடர்பாக என்னசெய்யவேண்டும், யாருக்கு எதிராகச் செய்யவேண்டும். என்பதெல்லாம் குறித்து தீர்மானிக்கப்படவேண்டும்.

இந்த வாகனங்களின் அடிச்சட்ட, என்ஜின் இலக்கங்கள் போன்றவை இரகசியமானவை என்று ஜனாதிபதி கூறியிருக்கிறார். ஆயினும் வாகன கொள்வனவுப் பற்றுச்சீட்டுகளிலும் சுங்கப் பகுதியிலும் அந்த இலக்கங்கள் காணப்படுகின்றன.

- இவ்வாறு அமைச்சர்கள் உபகுழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஓ)

## அச்சுவேலியில் உற்பத்தியான கோழிக்குஞ்சுகள் விற்பனை

அச்சுவேலி,ஜூலை21

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட கோழிக் குஞ்சுகள் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

அச்சுவேலி கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்தில் உற்பத்திசெய்யப்பட்ட பிரான்ஸ் நாட்டு "அபேட் - சேவர்" இன கோழிக்குஞ்சுகள் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக கோழி வளர்க்கும் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

கடந்தவருடம் டிசெம்பர் மாதம் பிரான்ஸில் இருந்து வரவழைக்கப்பட்ட தாய்க் கோழிகளில் இருந்து பெறப்பட்ட முட்டைகள்மூலம் இந்தக் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

வாரந்தோறும் விநியோகம் செய்யப்படவிருக்கும் கோழிக்குஞ்சுகளின் முதற்றொகுதி கரவெட்டி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் வடமராட்சிப் பகுதியில் கோழி வளர்க்கும் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

கடந்த வருடங்களில் பேட்டுக்குஞ்சு 42ரூபா வீதம் விற்பனை செய்யப்பட்டது. இந்த வருடம் 36ரூபா வீதம் (சில்லறை விலை) விற்பனை செய்யப்படுவதாக அறியப்படுகிறது.(ஓ-11)

## பாடசாலை மாணவர்கள் கொழும்பில் காடைத்தனம்

கொழும்பு,ஜூலை21

கொழும்பில் உள்ள இரண்டு பிரபல கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர் கோஷ்டிகளுக்கிடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதலில் 10 மாணவர்கள் காயமடைந்தனர்; 6 மாணவர்கள் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

கடவத்தைக்குச் செல்லும் பஸ்ஸில் பயணம் செய்த ஒரு கல்லூரியைச் சேர்ந்த இளைய மாணவர்களிடம் இன்னொரு கல்லூரியைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவர்கள் அச்சுறுத்திப் பணம் கேட்டார்கள் என்று கூறப்படுகிறது.

இதனால் ஏற்பட்ட சர்ச்சையை அடுத்து அச்சுறுத்தலுக்குள்ளான மாணவனின் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் கோஷ்டியாக 150இற்கு மேற்பட்டோர் சேர்ந்து மற்றைய கல்லூரிக்குள் புகுந்து அங்கிருந்த மாணவர்கள்மீது தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் 10 மாணவர்கள் காயமடைந்தனர். உடனடியாக அங்கு விரைந்த பொரளைப் பொலீஸார் 6 மாணவர்களைக் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ)

### கார் கொள்வனவில் மோசடி

## விமானப்படை முன்னாள் தளபதி ஆணைக்குழு முன் ஆஜராகவில்லை

விமானப்படையின் முன்னாள் தளபதி எயார் மார்ஷல் ஜயலத வீரக்கொடி இலஞ்ச ஒழிப்பு விசாரணை ஆணைக்குழு முன் நேற்றுமுன்தினம் ஆஜராகவில்லை. உடல்நலக்குறைவு காரணமாக ஆஜராக முடியாதிருப்பதாக அவர் ஆணைக்குழுவிடம் தெரிவித்திருக்கிறார்.

அவர் பதவியில் இருந்தபோது விமானப் படைக்கு 'பென்ஸ் கார்' ஒன்றைக் கொள்வனவு செய்வதில் இடம்பெற்றிருப்பதாகக் கூறப்படும் மோசடி குறித்து வாக்குமூலம் பெறவே அவர் ஆணைக் குழுவினால் அழைக்கப்பட்டிருந்தார்.

கார் ஒன்றைக் கொள்வனவு செய்ய 30 இலட்சம் ரூபா செலவிட திறைசேரி அனுமதி வழங்கியிருக்கையில் 70 லட்சம ரூபா செலவிட்டு கார் கொள்வனவு செய்யப்பட்டிருக்கிறது. இதில் மோசடி இடம்பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. (ஓ)

**நாளை**

ஆடி 6
திங்கட் கிழமை
(22.07.2001)
திதி : திரயோதசி
பிற்பகல் 3.32 வரை.
நட்சத்திரம்: மூலம்
முன்னிரவு 7.14 வரை.
சுபநேரம் : 12.01 - 1.31
ராகுகாலம் : 7.31 - 9.01
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

விமர்சனங்களை எதிர்கொள்ளத் தயங்குவது வெற்றியை ஏற்க மறுப்பதற்குச் சமமாகும்.

## நீர்வேலி வாசிக்கு 2 வருட சிறை! நீர்கொழும்பு நீதிவான் தீர்ப்பு!

கொழும்பு,ஜூலை21

போலி ஆவணங்களைக் காண்பித்து வெளிநாடு செல்ல முயன்ற நீர்வேலி வாசிக்கு இரண்டுவருட சிறையும், ஒரு லட்சம் ரூபா தண்டமும் வித்திக்கப்பட்டது.

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த கனகசேகரம் சிவசிதம்பரம் என்ற நபர் கடந்த டிசம்பர் மாதம் 11ஆம் திகதி ஒரு பெண்ணையும் குழந்தையொன்றையும் போலி ஆவணங்களைக்காட்டி பஹ்ரெய்ன் நாட்டு விமான நிலையத்திலிருந்து இன்னொரு நாட்டுக்கு அழைத்துச செல்ல முற்பட்டவேளை கைதுசெய்யப்பட்டு இலங்கைககுத் திருப்பி அனுப்பப்பட்டார்.

இவரது வழக்கை விசாரித்த நீர்கொழும்பு நீதிமன்ற நீதிவான் எம்.என்.பூரான் அவர் குற்றவாளியென தீர்ப்பளித்து இரண்டு வருட கடூழியச் சிறையும் ஒரு லட்சம் ரூபா அபராதமும் செலுததுமாறு தண்டனை விதித்தார். (ஓ)

## பளையில் மீளக் குடியமர்ந்தோர் உதவிப் பணம் பெறுவதில் சிரமம்

### அங்கு தபாலகம் இல்லாததால்

தென்மராட்சி,ஜூலை21

பளைப் பிரதேசத்தில் அஞ்சல் அலுவலகம் இன்னமும் இயங்காததால் இப்பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள 50இற்கும் மேற்பட்டவர்கள் பொதுஜன மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஜூலை மாதத்திற்குரிய கொடுப்பனவுப் பட்டியல் தற்போது கரவெட்டி அஞ்சல் அலுவலகத்தில் இயங்கும் பளை அஞ்சல் அலுவலகத்திற்கு பிரதேச செயலகத்தினால் அனுப்பப்பட்டுள்ளதால் இக்கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள முடியாதநிலை இவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

பளையில் தங்கியுள்ளவர்கள் மாதாந்த உதவிப் பணம் பெறுவதற்கு முகமாலை சோதனை நிலையம் ஊடாக கரவெட்டிக்குச் சென்றுவர 100 ரூபாவுக்கு மேல் செலவாகுமென்பதால் இக்கொடுப்பனவை பிரதேச செயலகத்தில் வைத்து வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறு அவர்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை, பளையில் இயங்கும் பிரதேச செயலகம், பிரதேச சபை ஆகியவற்றிற்கு அனுப்பப்படும் கடிதங்கள் வாரத்தில் ஒரு தடவையே இவ்வலுவலக உத்தியோகத்தர்களால் எடுத்து வரப்படுவதால் பொதுமக்களால் அனுப்பப்படும் கடிதங்கள் காலந்தாழ்த்தி கிடைப்பதாக மேற்படி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பளை அஞ்சலகம் இயங்குவதற்கு புலோப்பளையில் கட்டட வசதிகள் இருந்தும் அஞ்சலகத்தை மீளஇயக்குவதில் அசமந்தப் போக்கு காட்டப்படுவதாக பொதுமக்கள் தெரிவித்தனர். (ஓ-117)

## பலாலி அம்மன் ஆலயத்தில் பூசைக்கு முட்டுக்கட்டை

அச்சுவேலி,ஜூலை21

பலாலி கிழக்கு இராச இராசேஸ்வரி அம்மன் கோயில் பொதுமக்களினால் பற்றைகள் வெட்டி துப்புரவு செய்யப்பட்டபோதிலும் பூசை வழிபாடு செய்வதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

இந்து சமய விவகார அமைச்சர் மகேஸ்வரன் மேற்கொண்ட முயற்சியினால் பலாலி அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்கள் இம்மாதம் 4ஆம் திகதி தொடக்கம் ஆறு தினங்கள் தொடர்ந்து இந்த ஆலயத்தையும் ஆலயத்தின் சுற்றாடலையும் பற்றைகள் வெட்டி துப்புரவு செய்தனர். நூற்றுக்கணக்கான பொதுமக்கள் இந்தப் பணியில் ஈடுபட்டனர். ஆயினும் கடந்த 11ஆம் திகதி வியாழக்கிழமை இராச இராஜேஸ்வரி அம்பாளை பிரதிஷ்டை செய்து பூசை வழிபாடுகளை நடத்த ஆலயக் குருக்கள் உட்பட சென்றவர்கள் அச்சுவேலி - சங்கானை வீதி இராணுவ காவல் அரணுக்கு அப்பால் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

பொதுமக்களை திட்டமிட்டபடி ஆலயத்திற்கு செல்ல வைப்பதற்கு இந்துசமய விவகார அமைச்சர் மகேஸ்வரன் மேற்கொண்ட முயற்சிகளும் பலன் அளிக்கவில்லை எனக் கூறப்படுகிறுது.

ஆலயத்திற்கு செல்வதற்குச் சென்ற ஆலயக்குருக்கள் உள்ளிட்ட பொதுமக்கள் அன்றையதினம் பிற்பகல் 2 மணி வரை சங்கானை வீதி காவல் அரண் அருகில் காத்திருந்துவிட்டு ஏமாற்றத்துடன் வீடு திரும்பியதாகக் கூறப்படுகிறது. (ஓ-11)

## காணி அமைச்சின் நடமாடும் சேவை

### நாளை வவுனியாவில்

வவுனியா,ஜூலை21

வவுனியாவில் நாளை காணி அமைச்சின் நடமாடும் சேவை இடம்பெறும். இது தொடர்பாக இன்று வவுனியா செயலகத்தில் மன்னார் - கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள், விவசாய உத்தியோகத்தர்கள் கலந்துகொள்ளும் விசேட கூட்டம் நடைபெறவுள்ளது.

காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன நடமாடும் சேவையில் பங்குபற்றுவார். இச்சேவைக்கான ஏற்பாடுகளை புனர்வாழ்வு அமைச்சின் இணைப்பாளரான மகேஷ் தவச்செல்வம் செய்திருக்கிறார்.

வவுனியா மற்றும் வன்னிப் பிரதேசங்களில் உள்ள காணிகள் தொடர்பான தமது பிரச்சினைகளுக்கு இந்த நடமாடும் சேவையில் பொதுமக்கள் தீர்வுகளைப் பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யுத்த அனர்த்தங்கள் மற்றும் இடப்பெயர்வுகள் காரணமாக காணி தொடர்பான ஆவணங்களை தொலைத்த அல்லது ஆவணங்கள் சேதமடைந்த சம்பவங்கள் அதிகம் இடம்பெற்றுள்ளன.

ஆகவே இப்பிரதேசங்களில் உள்ள காணிகள் தொடர்பான தமது பிரச்சினைகளைத் தீர்க்க பொதுமக்களுக்கு இந்த நடமாடும் சேவை நல்லதொரு வாய்ப்பாகும் என்று காணியமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ)

# பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்கு நிதி பற்றாக்குறை

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் கடந்த வருடம் நிர்மாணிக்கப்பட்ட மாடிக் கட்டடத்தின் கட்டட வேலைகள் பூர்த்தியடையாத நிலையில் இருந்து வருகின்றது. கடந்த வருடம் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபை ஒதுக்கீடு செய்த நிதியில் ஒரு பகுதி நிதியே கிடைத்ததாகவும் இதனைக்கொண்டு ஒரு பகுதி கட்டட வேலைகள் செய்து முடிக்கப்பட்டதாகவும், கட்டடத்தை பூர்த்தி செய்வதற்கு மேலும் நிதி தேவைப்படுவதாகவும் கல்லூரியின் அபிவிருத்திக்குழு தெரிவித்துள்ளது.(ஒ-135)


## ரஷ்யாவில் மருத்துவக் கல்வி

சர்வதேச அங்கீகாரம் பெற்ற லுமும்பா போன்ற ரஷ்யப் பல்கலைக்கழகங்களில் மருத்துவக் கல்வி பெற அனுமதி பெற்றுத்தரப்படும்.

| ஊடகம் | காலம் | செலவு |
|---|---|---|
| ஆங்கிலம் | 6 வருடம் | 4000 டொலர் வருடம் |
| ரஷ்யமொழி | 7 வருடம் | 2000 டொலர் வருடம் |

*உடன் சந்திக்கவும்:*

Dr.க.சிவனடியான்.

காலை: முத்தவிநாயகர் கோயிலடி, ஆனைக்கோட்டை.

மாலை: யாழ்.வீதி, மானிப்பாய்.

(6074)



## FLASH VACANCY
## MICRO PROJECT TEAM
## VACANCY

The Micro Project Team as a part of Project Implementation for Jaffna District is announcing the following vacancies in order to assist Government Implementing Partner:

1. Field Monitoring Officer
2. Field Finance Officer
3. Computer clerk

**Candidates are expected to meet the following requirements:**

- Secondary education with good experience in Community Activities.
- Fluency in English, both spoken and written.
- Good inter - personal skills, team work and flexibility.
- Experience in project documentation and computer skills.
- Field experience in assessment and monitoring projects (post1 and 2).
- Excellent report writing skills (post 1 and 2).
- Ability to perform independent office management (post 1 and 2).
- Holding of Motorcycle driving licence (post 1 and 2).
- Good co-ordination abilities with other project partners (post 1,2,3).

Candidates should be aware that: **Over60% OF THE WORK TIME WILL BE SPENT IN THE FIELD.**

Applications and C.V. should be forwarded to the address bellow, on or before: 26th July 2002.

**UNHCR**

223, Temple Road, Jaffna. (6133)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி வள்ளியம்மை S.K ஆறுமுகம்

திதி: 21-07-2002

அன்பினால் உலகை ஆண்ட
எமதருமைக் குடும்ப விளக்கே!
உங்கள் பூ முகத்தை எப்போது காண்போம்?
நாள்கள் பல மறைந்தாலும் - உம்
நினைவலைகள் எம்மை விட்டு
நீங்கவில்லை தாயே! வள்ளி அம்மா!!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.*

நிரந்தர முகவரி:
*கைதடி - நாவற்குழி.*
தற்காலிக முகவரி:
*528, பலாலி வீதி,*
*திருநெல்வேலி.*

(6195)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.


## மீண்டும் ஆனையிறவு உப்பு

தென்மராட்சி,ஜூலை21

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உப்பு விற்பனைக்கு வரத்தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனையிறவுப் பகுதியில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து மூடப்பட்ட உப்பளம், கடந்த வருடம் மீள ஆரம்பிக்கப்பட்டது. இங்கு உற்பத்தி செய்யப்பட்ட உப்பு பைக்கற் 17ரூபா விலையில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-117)

## மானிப்பாயில் 'டெங்கு' தடுப்பு நடவடிக்கை

சண்டிலிப்பாய்,ஜூலை21

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு காய்ச்சல் நோய்த்தடுப்பு நடவடிக்கை இப் பிரிவிலுள்ள வலி. தென்மேற்கு பிரதேச சபை, வலிமேற்கு பிரதேச சபை ஆகியவற்றின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சன சமூக நிலையங்கள் மூலம் அவ்வப் பகுதியிலுள்ள - பொது இடங்களிலுள்ள பற்றைகள், செடிகள் ஆகியவற்றை சிரமதான மூலம் அழித்து துப்புரவு செய்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதே வேளை - இப்பிரிவைச் சேர்ந்த பொது சுகாதார பரிசோதகர்கள் டெங்கு காய்ச்சல் நோய் பற்றிய கருத்தரங்குகளை தமது பிரிவிலுள்ள சன சமூக நிலையங்கள் மற்றும் பாடசாலைகளில் நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-135)

## மிதிவெடியில் சிக்கி குடும்பஸ்தர் காயம்!

தென்மராட்சி,ஜூலை21

வீதி அருகில் குப்பை எரிக்கப்பட்ட இடத்தை துப்புரவு செய்யச் சென்ற நான்கு பிள்ளைகளின் தந்தை மிதிவெடியில் சிக்கி காலில் காயமடைந்த சம்பவம் கடந்த வியாழக் கிழமை மாலை 5.00 மணியளவில் சாவகச்சேரி சங்கத்தானை சங்கம் வீதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கந்தையா ஆனந்தராசா (வயது 42) என்பவரே மிதிவெடியில் அகப்பட்டு படுகாயமடைந்து யாழ்போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

இம்மாத முற்பகுதியில் சங்கத்தானைப் பகுதியில் மிதிவெடியில் அகப்பட்டு வைத்திலிங்கம் குணரத்தினம் என்பவர் காலை இழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-117-31)


## FLASH VACANCY
## COMMUNITY FACILITATORS
## VACANCY

The Durable Solution Assessment Team as a part of UNHCR Project Implementation is looking for: Community Facilitators.

Candidates are expected to meet the following requirements:

- Secondary Education with at least 3 years experience in Social Services Activities.
- Ability in originating project proposals in the field of Human Rights with extended report writing skills.
- Field work experience.
- Good Computer skills.
- Languages: Fluency in: Tamil, English (spoken and written), knowledge of Sinhala language would be an asset.
- Good inter-personal skills, team work and flexibility.

*Applications and C.V. should be forwarded to the address below, on or before: 24th July 2002.*

**UNHCR**

(6133) *223, Temple Road, Jaffna.*



## விற்பனையாளர்கள் தேவை

புடைவை, கண்ணாடி விற்பனையாளர்கள் தேவை. பழகவிரும்புபவர்களும் விரும்பத்தக்கது. மற்றும் விடுதி மேற்பார்வையாளர், விடுதி பணியாளர்கள் தேவை.

*தொடர்புகளுக்கு:*

த.குமாரசாமி அன் சன்ஸ்,

248/1, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (6194)



## விற்பனைக்கு

CANNON LNP - 1215 PHOTO COPY MACHINES உதிரிப்பாகங்கள், டோனர், மற்றும் LAMINATING MACHINES என்பவற்றை மொத்தமாகக் கொள்வனவு செய்யவிரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். யாழ்ப்பாணத்தில் நேரடியாக விநியோகிக்கப்படும்

**ASIA PACIFIC TRADERS (PTD) LTD**

No.10, 1ST, FLOOR,
J.T.COMPLEX,
385, GALLE ROAD, COLOMBO - 6
Telephone: 591285, 595811
Fax: 596663

(6073)



## சிறுவர்களுக்காகச் செயற்படுவோம்

குடும்பப் பிரச்சினைகள் அச்ச உணர்வை, தனித்து விடப்பட்ட குடும்பிய நிலையை, குற்ற உணர்வை, கோபத்தை சிறுவனின் மனதில் தோற்றுவிப்பதனால் அவன் கல்வியில் ஆர்வத்தை, உற்சாகத்தை இழக்கின்றான். எனவே நாம் சிறுவர்களினது நீண்ட கால வாழ்வினைப் பாதிக்கும் அல்லது நலன்களினைச் சிதைவடையச் செய்யும் எந்தவொரு செயலையும் செய்தலாகாது.



உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு,
அறை எண் - 30,
யாழ்.போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

சிறுவர் பாதுகாப்பு (ஐ,இ) அனுசரணையுடன் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினரின் வெளியீடு! (C/23005)



## மனதாரம் பாராட்டுகின்றோம்



சிறந்த விருதுபெற்ற பட்டதாரி ஆசிரியரும் கல்வி உலகுக்கு அரும் பெருஞ்சேவையாற்றி இளைப்பாறிய அதிபரும் உன்னத சமூகசேவையாளருமாகிய

## உயர்திரு. சின்னையா தருமலிங்கம்
## (C.T.)

அவர்கள் நீதி அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டமையைப் பாராட்டி அவரைக் கௌரவிக்கும் முகமாக 14.07.2002 ஞாயிற்றுக்கிழமை அன்று தென்புலோலியூர் மக்களால் யா/புற்றளை மகாவித்தியாலயத்தில் ஒரு பாராட்டு விழா நடத்தப்பெற்றது.

இவ்விழாவில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பிரபல சட்டத்தரணியுமான கௌரவ அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்கள் அன்னாருக்கு மலர் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார்.

**"வாழ்க அவர் பணி! வளர்க அவரது தொண்டு!!"**

- தென்புலோலியூர் மக்கள். (6184)

# புலிகளுடன் பேசித் தீர்க்க விரும்புகிறாராம் ஹக்கீம்!

கொழும்பு,ஜுலை21

"புலிகளுடன் பேசித் தீர்வு காண விரும்புகிறோம்"

- இப்படிக் கூறியிருக்கிறார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்.

கொழும்பு தொலைக்காட்சி சேவை ஒன்றுக்கு நேற்றுமுன்தினம் அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

'தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வர்த்தகத்தில் ஈடுபடும் முஸ்லிம்கள் உட்பட அனைவரிடமும் வரி அறவிடுகின்றோம்' என்ற சாரப்பட விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை சிறப்பு அரசியல்துறைப் பொறுப்பாளர் கரிகாலன் அண்மையில் வழங்கிய பேட்டி ஒன்றுக்குப் பதில் அளிக்கும் வகையில் அமைச்சர் ஹகீம் இந்தப் பேட்டியை அளித்திருந்தார். அதில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

முஸ்லிம்களின் அரசியல் தலைவர்களைப் பிளவுபடுத்தும் வகையில் விடுதலைப் புலிகள் செயற்படுகிறார்களோ என்ற அச்சம் முஸ்லிம் மக்கள் மத்தியில் தற்போது எழுந்துள்ளது.

இது சம்பந்தமாகத்தான் நாம் புலிகளுடன் பேச விரும்புகின்றோம். நிச்சயமாகப் பேசவேண்டும். பேச்சு மூலமின்றி வேறு வழியில் இவற்றுக்குத் தீர்வு காணமுடியாது. நேர்மையாகப் பேசவேண்டும். மனம்விட்டுப் பேசவேண்டும். தமது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தினுள் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முஸ்லிம்களிடம்தான் தாம் வரி அறவிடுவதாகப் புலிகள் கூறுகின்றார்கள். அப்படியானால் முஸ்லிம்களின் மேலாதிக்கம் உள்ள பிரதேசங்களில் தமிழர்கள் வரி செலுத்த வேண்டும் என்று முஸ்லிம்களும் பேசத் தலைப்பட்டால் எப்படியிருக்கும்? அப்படியானதொரு காலம் வராமல் நாங்கள் தடுக்கவேண்டும்.

ஏனெனில் இரண்டு சமூகங்களும் இரண்டு இனங்களும் சேர்ந்து வாழ்வதற்குரிய சூழலை அமைப்பதற்குப் போராடுகின்றபோது -

முஸ்லிம்களின் விடுதலைக்காக, விமோசனத்துக்காகப் போராடுகின்றோம் என்பதை நியாயப்படுத்தாத விடுதலைப் புலிகள் எவ்வாறு முஸ்லிம்களிடம் வரி அறிவிடமுடியும்?

இந்த அடிப்படையை ஏற்றுக் கொண்டுதான் நாம் உடன்பாடு கண்டோம்.

புலிகள் தமது பிரதேசத்தில் வரி விதிப்பதாகக் கூறுகின்றார்கள் பிரதேசங்கள் எதுவும் உடன்பாட்டில் குறிப்பிடப்படவில்லை.

கிழக்குப் பிராந்தியம் முழுவதிலும் முஸ்லிம்களிடம் வரி அறவிடமாட்டோம் என்று கூறிவிட்டு தற்போது வரி அறவிடுவது எந்தவகையில் நியாயம்?

இன்று முஸ்லிம்கள் தமது வயல் நிலங்கள், பொருளாதாரக் கொடுக்கல் வாங்கல் என்று தமிழர் பிரதேசங்களுக்கு சென்று வரவேண்டியவர்களாக இருக்கின்றனர். அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்கள் என்று கூறப்படும் பகுதிகள் உட்பட தமிழர் வாழும் பிரதேசங்கள் அனைத்திலும் இன்று புலிகளின் ஊடுருவல் முற்றுமுழுதாக இடம் பெற்றுள்ளது.

"இந்த உடன்படிக்கை முஸ்லிம்களின் பாதுகாப்பைப் பங்கப்படுத்தும்" என்று அன்று கூறியவர்கள் எல்லாம் "பார்த்தீர்களா! நாங்கள் அன்றே சொன்னோம். நீங்கள் கேட்கவில்லை" என்று விரல் சுட்டி அரசையும், அரசில் அங்கமாகவுள்ள எங்களையும் கேட்க ஆரம்பித்து விட்டார்கள்.

நியாயமாக - நேர்மையாக - விஷயங்கள் நடக்கும் என்ற எதிர்பார்ப்புடன் நாங்கள் செய்து கொண்ட உடன்படிக்கை - புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் - இப்படியெல்லாம் வியாக்கியானம் செய்யப்படுகின்றது. இது வருத்தத்துக்குரியது. எல்லாப் பிரதேசங்களிலும் புலிகள் முஸ்லிம்களுக்கு எதிராகப் பொருளாதார நெருக்குதல்களை கொடுக்க ஆரம்பித்துவிட்டனர். முஸ்லிம் வியாபாரிகளுக்கு பொருளாதாரத் தடைகள் இடப்படுகின்றன. அவர்களுக்கு புலிகளினால் மறைமுகமான தடையீட்டினால் பல நெருக்குதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இது வருந்தத்தக்கது.

- என்றார் அமைச்சர் ஹக்கீம்.

## நீதிமன்றம் அனுமதி

சென்னை,ஜுலை21

சென்னையில் உலகத் தமிழர் பேரவை மாநாட்டை நேற்றும் இன்றும நடத்த பொலீஸ் அனுமதி வழங்க மறுத்தது; தடைவிதித்தது.

மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் தடையை எதிர்த்து நீதிமன்றம் சென்றனர். பொலீஸ் தடையை ரத்துச்செய்து மாநாட்டை நடத்த நீதிமன்றம் அனுமதி வழங்கியது. புலிகளுக்கு ஆதரவாகக் கோஷங்கள் எழுப்பவோ மாநாட்டில் அவர்களைப் பற்றிப் பேசவே கூடாது என்று நீதிமன்றம் நிபந்தனையும் விதித்தது. (ம)

# கரும்பினில் பிழிந்த சாறாக இனிக்கும் சி.வை.தாமோதரம்பிள்ளை - ஒரு நோக்கு

திருமூலர் பெருமானால் 'சிவபூமி' என்று போற்றப்பட்ட ஈழத்திருநாட்டிலே சிறுப்பிட்டி என்னும் ஊரில் நாவலரோடு சமகாலத்திலே - அவரோடு இணைந்து - சைவத்திற்கும், தமிழுக்கும் அரும்பணியாற்றியவர் சி.வை. தாமோதரம்பிள்ளை.

இவரது தொன்மைசேர் சிறப்புக்கள் பலவற்றையும் ஈழத்திருநாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற சைவப் புலவர் செல்லத்துரை, கலாநிதி க. சொக்கலிங்கம், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகிய தமிழ்ப் புலைமையுடையோரிடமிருந்து ஆக்கங்களைப் பெற்று, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவின்போது கல்லூரியின் தமிழ்ச் சங்கம் "சி.வை.தாமோதரம்பிள்ளை ஒரு நோக்கு" என்ற நூலினை வெளியிட்டுள்ளது.

இந்த நூலில் இடம்பெற்றுள்ள



வெளியீடு: தமிழ்ச்சங்கம்
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி,
கோப்பாய்.

சி.வை.தா.பிள்ளை அவர்களின் படத்திற்குக் கீழே,

*"ஏட்டில் இருந்த அருந்தமிழ்*
*நூல்கள் எனப் பலவும்*
*தீட்டி வழுக்களைந் தச்சினில்*
*ஆக்குபு செந்தமிழ்சேர்*
*நாட்டில் அளித்துயர் தாமோ*
*தரேந்திரன் நண்ணுபுகழ்*
*பாட்டில் அடங்கும் தகைத்தோ?*
*புலவர்கள் பாடுதற்கே"*

என்று சுன்னாகம் அ.குமாரசாமிப் புலவர் சி.வை.தாவைச் சிறப்பித்துப் பாடிய அருமையான பாடல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இப்பாடல் நூலுக்கு தனி அழகு சேர்க்கிறது.

இந்நூலில் முதலாவதாகப் பிரசுரிக்கப்பட்ட - சைவப் புலவர் இ.செல்லத்துரை (சிறுவைகிழார்) எழுதிய - வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் என்னும் பகுதியிலே சிவைதா. அவர்களின் பிறப்பு, கல்வி, சமூகப்பணி மற்றும் தொழில்புரிந்த நிறுவனம் என்பன பற்றிக் குறிப்பிட்டதோடு மட்டுமல்லாமல ஆறுமுகநாவலர் சரித்திரத்தில் தாமோதரம்பிள்ளை அவர்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளமையையும் இங்கு சிறப்பித்துக்காட்டியுள்ளார்.

மேலும், இவர் தனது தொகுப்பிலே சி.வை.தா. அவர்களால் நன்நூல்களான நீதிநெறி விளக்கம், வீரசோழியம், தணிகைப் புராணம், இறையனார் அகப்பொருளுரை, தொல்காப்பியம் - பொருளதிகாரம் - எழுத்ததிகாரம் - சொல்லதிகாரம், கலித்தொகை, இலக்கண விளக்கம், சூழாமணி ஆகிய நூல்களை மீள்பதிப்புச் செய்து வெளியிட்டார் எனவும் - அந்நூல்கள் அச்சிட்டு வெளியிடப்பட்ட ஆண்டுகளையும் குறிப்பிட்டு - தமிழுக்கு சி.வை. தா. அழகு சேர்த்தமையை விளக்கியுள்ளார்.

சைவப்புலவர் இ.செல்லத்துரை ஆக்கத்தினை அடுத்து "சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களின் நோக்கில் தமிழ்மொழியின் தோற்றம் பற்றிய கருத்துக்கள்" என்ற தலைப்பில் கலாநிதி க.சொக்கலிங்கம் அவர்களினால் எழுதப்பட்ட ஆக்கத்தில் சி.வை.தாமோதரம்பிள்ளை பிறப்பில் கிறிஸ்தவனாக இருந்து இறுதியில் சைவசமயத்திற்கு மாறி சமயப்பணியோடு தமிழ்ப்பணியும் இணைந்து ஆற்றினார் என்றும் - அதனால் அவரது வரலாற்றினை இரு முகங்கள் கொண்டது என்றும் - சி.வை.தாவின் 'இரு முகங்கள்' என்ற தலைப்பில் கூறியிருக்கிறார்.

இவற்றோடு சி.வை.தா. வெளியிட்ட நூல்கள் மற்றும் மேலைநாட்டு மொழிகளான இலத்தின், கிரேக்கம்,

நூல்விரிசை

ஹீப்ரு, ஜேர்மன், பிரெஞ்சு போன்றவற்றுடன் தமிழ்,தெலுங்கு, மலையாளம், துளு போன்ற தென்னக மொழிகளையும் கற்று "தென்னிந்திய திராவிடமொழிகள் ஒப்பிலக்கணம்" என்னும் ஒப்பிலா உயர் நூல் ஒன்றையும் எழுதினார் என்றும் -

மனோன்மணிய நாடக நூலை தமிழ்த் திராவிட மொழிக் குடும்பத்தின் தாயாக்கி சமஸ்கிருதத்தை செத்த சடமாக்கினார் என்றும் -

அத்துடன், சி.வை.தா.கையாண்ட மொழிநடையும், முறைமையும், தமிழ் இலக்கணம், இலக்கியம் ஆகியவற்றுக்கு சி.வை.தா. ஆற்றியபங்கு மற்றும் தொகுப்புரை, பிற்குறிப்பு ஆகிய உப பிரிவுகளாகப் பிரித்து சி.வை. தாவின் வரலாற்றினைச் சிறப்பித்துக் கூறியுள்ளார் கலாநிதி சொக்கன்.

கலாநிதி சொக்கன் அவர்களின் ஆக்கத்தினைத் தொடர்ந்து கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களின் ஆக்கம் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அவர் தனது ஆக்கத்திலேயே முன்னுரை ஒன்றினை வழங்கியுள்ளார். அந்த முன்னுரையிலேயே நாவலரையும், சி.வை.தா.பிள்ளை அவர்களையும் ஒப்பிட்டு, இருவரும் சமகாலத்திலே வாழ்ந்தவர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

### தெல்லியூர் சி.ஹரிகரன்

அடுத்து, சி.வை.தாவின் வாழ்வியலும் சமயமும், சி.வை.தாவின் வாழ்க்கைச் சமயம் என்னும் பகுதியில் அவர் பிறப்பில் கிறிஸ்தவராக இருந்து சைவசமயத்துக்கு மாறி ஆற்றிய பணிகள் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார்.

நூலின் இறுதிப் பகுதியில் சி.வை. தாவின் வம்சாவழி மற்றும் வரலாற்றுக் குறிப்பு என்பன காணப்படுகின்றன.

இறுதியாக 'கற்றறிந்த பெரியோரின் கருத்து' என்ற தலைப்பில் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களைப் பற்றிக் குறிப்பிட்ட கருத்துக்களைத் தொகுத்துப் பதித்துள்ளார்.

எனவே, ஒட்டுமொத்தமாகத் தொகுத்து நோக்கும் போது, சி.வை. தாமோதரம்பிள்ளை பற்றிய பரந்த விடயங்களை சிறிய நூலிலே 'கரும்பிலே பிழிந்த சாறு' போலத் தொகுத்து, பல அறிஞர்களிடமிருந்து பெற்று வெளியிட்டிருக்கிறது கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி தமிழ்ச்சங்கம் இந்நூல் உயர்கல்வி கற்பவர்களுக்கும் தமிழை விசேட பாடமாக பல்கலைக்கழகத்தில், வெளிவாரியாகக் கற்பவர்களுக்கும் பெரிதும் உதவும். இவ்வாறான ஒரு நூலினை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி தமிழ்ச் சங்கத்தினர் வெளியிட்டுள்ளது தமிழ்ச் சமூகத்திற்குப் பெரும் வரப்பிரசாதமாகும்.

## செய்திக் கொத்து

### தாதியர் பாடசாலைகளுக்கு சனி விடுமுறை

கோப்பாய்,ஜுலை21

நாட்டிலுள்ள தாதியர் பாடசாலைகளுக்கு சனிக்கிழமையும் முழு விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நடைமுறை நேற்றுமுதல் நடைமுறைக்குவந்தது.

இதுவரைகாலமும் சனிக்கிழமைகளில் அரைநாள் கல்விச்செயற்பாடுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-72)

### வீதி விபத்தில் ஓட்டோ சாரதி காயம்

யாழ்ப்பாணம்,ஜுலை21

கோப்பாய்ப் பகுதியில் இடம்பெற்ற வான் - ஓட்டோ விபத்தில் ஓட்டோச் சாரதி காயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் கோப்பாய் கிருஷ்ணன் கோயில் சந்திக்கு அருகில் இடம் பெற்ற இந்த விபத்தில் மண்டைதீவில் இருந்து இடம்பெயர்ந்து தற்பொழுது கோண்டாவிலில் வசித்துவருகின்ற வீரவாகு ஜெயக்குமார் (வயது - 38) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

நெற்றிப் பகுதியிலும் காலிலும் காயமடைந்த இவர் தற்பொழுது யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-10)

### ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு சித்திரப்போட்டி

யாழ்ப்பாணம்,ஜுலை21

யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கான சித்திரப்போட்டி நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

மேற்படி போட்டி யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும், கோப்பாய்க் கோட்ட பாடசாலைகளுக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் நடைபெறும்.

போட்டியில் பங்குபற்றும் ஆசிரியர்களும் மாணவர்களும் சகல முன ஆயத்தங்களுடனும் போட்டி நடைபெறும் பாடசாலைகளுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி போட்டியின் ஒவ்வொரு பிரிவிலும் நான்கு மாணவர் மட்டுமே பங்குபற்றலாம் என யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் தெரிவித்துள்ளார். (ஒ-69)

### ஆலயத்தில் தண்ணீர் தாங்கி அமைப்பு

சண்டிலிப்பாய்,ஜுலை21

வடலியடைப்பு பாருத்தனை ஐயனார் ஆலயத்தில் தண்ணீர் தாங்கி ஒன்றை நிறுவி குழாய் மூலம் பக்தர்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்வதற்கு ஆலய பரிபாலனசபை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. இதேவேளை - ஆலயத்திலிருந்து பிரதான வீதி வரை புதிய வீதியை அமைப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்தனர். (ஒ-135)

### சஞ்சிகை வெளியீடு

சுழிபுரம்,ஜுலை21

தொல்புரம் கிழக்கு விக்னேஸ்வரா சனசமூக நிலைய 'சமூகச் சுடர்' கையெழுத்துச் சஞ்சிகையின் 8 ஆவது வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-28)

### வடகடல் நிறுவனம் இந்துகலாசார அமைச்சின் கீழ்

யாழ்ப்பாணம்,ஜுலை21

யாழ்ப்பாணம் வடகடல் நிறுவனம் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதற்கான உத்தரவை விடுத்துள்ளார்.

இந்த நிறுவனத்துக்கு புதிய தலைவரை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நியமிக்கவிருக்கின்றார். (ஒ-3)

## செய்திக் கொத்து

### அந்தணா மாணவர்க்கு!

யாழ்ப்பாணம்,ஜுலை21

2001ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜீ.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிச் சித்தியடைந்த அந்தண மாணவர்கள் அனைவரும் தமது பெயர், விவரங்களை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்பு 'நியந்த்ரீ, சிவன்கோயில், நல்லூர் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

### சட்டவிரோத மணல் அகழ்வு தடுப்பு

வரணி,ஜுலை21

வரணி, பிரதேசத்தின் கிழக்குப் பகுதியில் உள்ள வெங்கிராயன் வயல்வெளி, காட்டுத் தோட்டம் ஆகிய இடங்களில் இரவோடு இரவாக சட்டவிரோத மண் அகழ்வு இடம்பெற்று வந்தது. இதனால் வயல் நிலங்கள், தென்னந்தோட்டங்கள் பாரிய அழிவுக்குள்ளாகின.

இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட பொதுமக்கள் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவிடம் முறையிட்டதாகவும் -

அதன் பயனாக தற்சமயம் சட்டவிரோத மண் அகழ்வு நிறுத்தப்பட்டுள்ளதாகவும் - பொதுமக்கள் தெரிவித்தனர். (ஒ-ரி)

### 'மனவெளி' நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜுலை21

தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் 'மனவெளி' கலை இலக்கிய அனுபவத் தொடர் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் உள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-9)

### கோப்பாய் பாடசாலை அதிபர்களுக்கு அழைப்பு!

யாழ்ப்பாணம்,ஜுலை21

பாடசாலை மாணவர்களுக்கான சீருடை விநியோகம் தொடர்பாக கோப்பாய்க் கோட்ட பாடசாலை அதிபர்களுடன் கலந்துரையாட வேண்டியுள்ளதால், சகல அதிபர்களையும் நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு கோப்பாய்ப் பிரதேச செயலகத்திற்கு வருகைதரும்படி பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ஒ-3)

### இழுவை இறால் மடிச் சங்கம் புதிய இடத்தில்

குருநகர்,ஜுலை21

குருநகர் சென்.ஜேம்ஸ் இழுவை இறால் மடிச் சங்கம் தற்போது குருநகர் கடற்கரை வீதியில் குருநகர் சனசமூக நிலையத்தின் முன்னால் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கிவருகிறது.

குருநகர் தண்ணீர்தாங்கி வீதியில் இச்சங்கம் முன்னர் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி)

### மூவர் விடுதலை

தென்மராட்சி,ஜுலை21

கடந்த டிசெம்பர் மாதம் படையினரின் புலனாய்வுப் பிரிவினரால் மீசாலை வடக்கில் கைதுசெய்யப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேரில் மூவரை சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் விடுதலை செய்துள்ளார்.

சட்டமா அதிபரின் உத்தரவின் பிரகாரம் கடந்த திங்கட்கிழமை இவர்கள் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மீசாலை வடக்கைச் சேர்ந்த கணபதி தம்பு, அவரது மனைவியான தம்பு நேசமணி, மகனான தம்பு சிவகுமார் ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்களாவர். (ஒ-117)

### சாரணர் பாசறை

சாவகச்சேரி,ஜுலை21

கிளிநொச்சி மாவட்ட சாரணர் தலைவர்களுக்கான பயிற்சிப் பாசறை வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் நேற்றுத் தொடங்கி தொடர்ந்து மூன்று நாள்கள் நடைபெறவுள்ளது.

சாரண தலைவர்களுக்கான பயிற்சிகளை வழங்க யாழ்.மாவட்டத்திலிருந்து சாரணிய மாவட்ட ஆணையாளர் வ.செல்வராசா உட்பட சாரணிய ஆசிரியர்கள் கிளிநொச்சி சென்றுள்ளனர். (ஒ-31)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Prima Broiler குஞ்சுகள் (Prima, Hijira, Greenvaley), Prima சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் 25.07.2002 மாலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். முதல் நாள் தடுப்பு மருந்து இலவசமாகத் தரப்படும். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (6091)

புதிய கம்பியூட்டர் பென்டியம் III, ரைகர் ஜெனரேற்றர், கோட்லெஸ் போன் (5km) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தியாகு, சங்கத்தானை, சாவகச்சேரி.
T.P.No. 070-212538 (6215)

HONDA CD-50, BAJAJ -KB 100 YAMAHA -XT 125 (Field Bicke) விற்பனைக்குண்டு. தொடர்பு:195/3, ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி. (6222)

Roland pad. Model No. SPD - 20 Brand - New, Yamaha Pad - Model No.: DD 50, Bongos, Piano (London Make) சிறு திருத்தங்களுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: A.B. Asbury, Church Lane, Araly North. (6095)

2 மாதம் நிரம்பிய டாசோன் (DASHON) நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 67/43, தர்மலிங்கம் அவெனியூ, கொட்டடி, யாழ்ப்பாணம். (6173)

ஒரு சில மாதங்கள் பாவித்த இரண்டு ஜெனரேட்டர்கள் (5K.V.) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 422, காலி வீதி, கொழும்பு - 03. தொலைபேசி இல:- 075-539596/ 074-719692, விஜித்/நிர்மலி. (C/22998)

ஊரெழு கிழக்கு, பலாலி வீதியில், வீடு, கிணற்றுடன் கூடிய 10 1/2 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சோதிநாதன், T.P.:593966, கொழும்பு. (6107)

159 - HONDA SUPER CUB - 50 FIRST OWNER மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 109, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். (6209)

Sony T.V. 2168, 2092, SR 30 டெக், T.V.S. MOTOR CYCLE விற்பனைக்கு உண்டு. (லைசன்ஸ், கெல்மற் இல்லாதது) தொடர்பு: J. மதன், செக்காலை லேன், மானிப்பாய் வடக்கு, மானிப்பாய். (6219)

## தவறிவிட்டது

199/5, கில்னர் லேன், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கணபதி ஸ்ரீதரன் என்பவருடைய தேசிய அ.அ.(இல. 811224316V), விசேட அ.அட்டை (இல. 0902015143) என்பன யாழ்நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் [illegible] ஒப்படைத்துதவவும். (6193)

சுதுமலை தெற்கு, யூதா கோயிலடி, மானிப்பாயைச் சேர்ந்த கந்தசாமி புவனேஸ்வரி என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.398450256V), விசேட அ.அட்டை (இல.0905026810) என்பன 28.06.2002 அன்று நயினாதீவில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 730, நன்னி கிறைண்டிங் மில்லில் (சிவலிங்கப்புளியடி) ஒப்படைக்கவும்.(6199)

86, அம்பாள் வீதி, நாயன்மார்கட்டைச் சேர்ந்த ஆறுமுகம் அருள்மணி என்பவருடைய தே.அ.அட்டை (இல.687891970V), விசேட அடையாள அட்டையும் வங்கிக் கணக்குப் புத்தகமும் (இல.22890) முத்திரைச் சந்திக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. [illegible] மேலுள்ள [illegible] ஒப்படைத்து உதவவும். (6200)

## ஜோதிடம்

உள்நாட்டில் வெளிநாட்டில் பிறந்த உங்கள் குழந்தைகளின் ஜாதகம் சிறப்பாக முழு விவரங்களுடன் கணித்துக்கொடுக்க, பலாபலன்கள், விவாகப்பொருத்தம் பார்க்க, சுபகருமங்களுக்கு நாள் குறிக்க சோதிடர் எஸ்.சிதம்பரநாதனைக் கீழ்க்காணும் முகவரியில் தொடர்புகொள்ளுங்கள்: புங்கடி, கொடிகாமம் றோட், புலோலி தெற்கு, பருத்தித்துறை. (6183)

## வியாழ மாற்றம் எப்படி?

எங்கும் விற்பனையாகின்றது. ரூ12/= யுத்தச் செவ்வாயையும் வியாழனையும், சனி ராகு தீய சேர்க்கை நோக்குவதால் புரிந்துணர்வுகள் இழுபறியாகி, அமைதிப்பேச்சுக்கள் அடுத்த வருடத்திற்குப் பின்தள்ளப்படும். கணிப்பாசிரியர் "சத்யா", ஆனைக்கோட்டை.021/2753. (6212)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் மற்றும் இறைச்சிக் கோழிகள் மிகவும் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் தினமும் சுத்தம் செய்து எவ்வேளையும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: Y.A. சுரேஸ், கிராமக்கோட்டடி, எரிபொருள் நிலைய முன் வீதியில் (150 மீற்றருக்குள்), பருத்தித்துறை. (சுத்தம் செய்தல் இலவசம்) (6108)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து, தேவையான நிறைகளில், குறைந்த விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (6058)

புறொயிலர் கல்பேட்ஸ் என்பன விற்பனைக்கு உண்டு. 1kg 150/- மட்டுமே. சுத்தம்செய்து 1/2 கிலோவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: S.குமரன், 227, பிறவுண் வீதி, (நரிக்குண்டு அருகில்) யாழ்ப்பாணம். (6145)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. 1kg 140/-. மொத்தக் கொள்வனவுகளுக்கு விசேட விலைக் கழிவுகள் உண்டு. தினமும் வேண்டிய நிறைகளில் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக), கட்டப்பிராய். (6179)

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ப.றஞ்சன், பொற்பதி றோட், கலைவாணி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. (6178)

## மணமகள் தேவை

கனடா (Canada) நிரந்தர பிரஜாவுரிமை பெற்ற, 1971ஆம் ஆண்டு பிறந்த, விசாகம் 3ஆம் பாதம் 12இல் செவ்வாய் உள்ள மணமகனுக்கு அழகிய, படித்த மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல.1575, C/o உதயன், யாழ்ப்பாணம். (6129)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, செவ்வாய்க் குற்றமற்ற, பட்டதாரி, 1975இல் பிறந்த மணமகனுக்கு தகுந்த மணமகளை எதிர்பார்க்கிறார்கள். பட்டதாரி அல்லது அரச நிறுவனங்களில் கடமை புரிவோர் விரும்பத்தக்கது. ஜாதக மற்றும் விவரங்களுடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல.1574, C/o உதயன், யாழ்ப்பாணம். (6130)

## மணமகன்கள் தேவை

கூட்டுத்தாபனமொன்றில் கடமை புரியும் கொழும்பில் வீடுள்ள, 1970, பூசம், 12இல் செவ்வாய் மணமகளுக்கும், ஆசிரியராகக் கடமையாற்றும் கொழும்பில் வீடுள்ள, 1967, ஆயிலியம், 12இல் செவ்வாய் மணமகளுக்கும் பட்டதாரி ஆசிரியர்கள், வங்கி உத்தியோகத்தர்கள் அல்லது அரச லிகிதர் மணமகன்கள் தேவை. தொடர்பு: இ.பாஸ்கரன், திருக்குமரன் மங்கள ஏஜென்சி (மகாலட்சுமி தேநீர்க் கடை அருகில்), K.K.S. வீதி, கொக்குவில். (6166)


தூரிகை

**தூரிகை**

**நுண்கலை வளாகம்**

**3 நாள் பயிலரங்கு**

இந்து, கிறிஸ்தவ, குஜராத்திய மணமகள் ஒப்பனையுடன் 10 முடியலங்கார முறைகளும் அரங்கில் இடம்பெறும்.

இடம்: தூரிகை
ம.ம.வி. வீதி, நெல்லியடி,
நாள்கள்: 23, 24, 25-07-2002
செவ்வாய், புதன், வியாழன்
நேரம்: 9மணி - 2மணி

ஆர்வமுடையோர் கலந்துகொள்ளலாம்.
(6218)


# அன்பு எனும் கனியை காணிக்கையாக்குவோம்

## ஞாயிறு நற்பிரசாதம்

சமாதானத்தை ஒவ்வொருவரும் எதிர்பார்க்கின்றோம். கிடைக்காதா என ஏங்குகின்றோம். தவிக்கின்றோம் கடைசியில் ஏமாற்றங்களையே எதிர்கொள்கின்றோம். அனுபவிக்கின்றோம். நாம் சமாதானத்தை மற்றவர்களுடன் பகிராமல் மன்னிக்காமல் கறைபடிந்த உள்ளங்களுடன் துன்புறுத்தல்கள், பழிவாங்கல்கள், போட்டி, பொறாமை போன்றவற்றால் மன்னிக்கமுடியாத மனங்களை உருவாக்கிவிட்டு சமாதானத்திற்காக காத்துக்கிடக்கின்றோம். விடியலைத் தேடுகின்றோம் கண்களை இறுக்க மூடியவர்களாய்.....

**ஜோ.ஜெஸ்ரின்**

"அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்." (மத்தேயு 5-9)

இறைவனின் மக்களாக வாழ்வதற்கு காணிக்கைகள் மற்றும் பலிப்பொருள்கள் எதுவும் முக்கியமல்ல. உங்கள் பகைவரை மன்னித்து அமைதியை ஏற்படுத்துவதால் இறைவன் உங்களுக்குள் உதயமாவார். மிகுந்த மகிழ்ச்சியடைவார்.

"குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள்" என்று யேசுபிரான் அழைக்கின்றார். ஏனென்றால் குழந்தைகளிடமே கள்ளமற்ற தூயஉள்ளம் இருக்கின்றது. குழந்தைகளை மட்டுமல்ல குழந்தை உள்ளம் படைத்தவர்களையும் இறைவன் விரும்புகின்றார்.

தீய சிந்தனைகளால் பாவத்தின் பிடிக்குள் சிக்கியவர்களாய் கொலை, கொள்ளை, விபச்சாரம் போன்ற நாற்றச் சேற்றுக்குள் சிக்குண்டு கிடக்கின்றோம். அழுக்குடன் வாழ்வதை தவிர்ப்பதால் அமைதி, சாந்தி, சகோதரத்துவம் மலரும். ஆக்க வழிகளை மறந்து இறைபுகழை வெறுத்தவர்களாய் அழிவுப் பாதையில் கால்களை வைத்து கதறி அழுவதால் என்ன பயன்?

இறைவனின் மறை உண்மைகளை அறியமுடியாதவனாய் மனிதத்தின் புனிதத்தை அறியாமல் நல் மனிதனாக வாழத் தெரியாமல் காலம் கழிந்து போகின்றது. இறைவிசுவாசம் அற்றுப்போய் பாவங்களும், அக்கிரமங்களும் மலிந்த உலகினிலே சமாதானத்தைத் தேடுகின்றோம். ஆனால், எங்களுக்குள்ளேயே சமாதானம் இல்லாதவர்களாக வாழ்கின்றோம். அன்பாக வாழ்ந்து காட்டுவதன் மூலம் எம் பாவங்களிற்கு மனம் வருந்தி நல் மனதாய் அன்பு என்னும் கனியை காணிக்கையாக்குவோம்.

உள்ளத்தில் சமாதானத்தை உருவாக்கி உலக சமாதானத்திற்காக இறைவனிடம் வேண்டுவோம். எமக்கு எது தேவைப்படுகின்றதோ அதையே பிறருக்கும் கொடுப்போம். அன்பைக் கொடுத்தால் இறை அன்பு கிடைக்கின்றது. உதவி செய்தால் இப்பிறப்பினிலே திரும்பக் கிடைக்கின்றது. "ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் நான் உங்களை அன்பு செய்தது போலவே" (யோவான் 13-34) என்ற இறைவாக்கின்படி ஆன்மீக வழியினில அன்புடன் வாழ்ந்து அகிலத்தை அமைதி பெறச் செய்வோம். அப்போதுதான் இல்லங்களிலும், உள்ளங்களிலும் இணைந்து நாட்டில் சமாதானம் மலரும்.

## கால்நடை மருத்துவ பணிமனை இடம்மாற்றம்

யாழ்ப்பாணம்,ஜூலை21

வட்டுக்கோட்டை, சங்கரத்தை சந்தி அருகில் இயங்கிவந்த அரச கால்நடை மருத்துவர் பணிமனை தற்காலிகமாக சித்தங்கேணிக்கு இடம்மாற்றப்பட்டுள்ளதாக கால்நடை மருத்துவர் டாக்டர் ஜி.ரகுநாதன் தெரிவித்தார்.

காரைநகர் வீதியில் சித்தங்கேணி சந்தியிலிருந்து சுமார் 200 யார் தொலைவில் சிவன்கோயிலுக்கு அருகே அரசு கால்நடை மருத்துவர் பணிமனை தற்காலிகமாக இயங்குவதாகவும் -

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள சகல கிராம அலுவலர் பிரிவுகளும், காரைநகரும் இப்பணிமனையின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் -

அவர் மேலும் தெரிவித்தார்.(ஓ)

## நிவாரணம் வழங்க ஏற்பாடு

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தினால் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள அனைத்துக் கிளைக் கடைகளிலும் நிவாரண உலர் உணவுப் பொருட்கள் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சங்க பொதுமுகாமையாளர் சி.தேவகுமார் தெரிவித்தார்.

இதுவரை ஐந்து கிளைக் கடைகளில் மட்டுமே உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வந்ததாகவும் - ஜூன் மாத நிவாரணப்பட்டியலின் பிரகாரம் பெருமளவு மக்களுக்கு உலா உணவுப் பொருள்கள் வழங்க வேண்டியுள்ளதால் சகல கிளைகளிலும் நிவாரணம் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும்- அவர் மேலும் தெரிவித்தார்.

(ஓ-117)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசலட்சுமி வைத்திலிங்கம்

மீசாலை மேற்கைச் சேர்ந்த திருமதி இராசலட்சுமி வைத்திலிங்கம் நேற்று (20.07.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் வைத்திலிங்கம் (ஓய்வுபெற்ற உதவிக் கூட்டுறவு ஆணையாளர்) அவர்களின் அருமை மனைவியும், சின்ராசா (டாக்டர், அமெரிக்கா), நாகராசா, திருமதி செல்லமுத்து, திருமதி கமலாம்பிகை (சித்திரா, கனடா), காலஞ்சென்ற திருமதி சரஸ்வதி ஆகியோரின் அருமைச் சகோதரியும் கமலா (அமெரிக்கா), பொன்னம்பலம், தர்மரத்தினம், காலஞ்சென்றவர்களான பொன்னையா, சண்முகம், சதாசிவம் ஆகியோரின் அருமை மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் மீசாலையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.* (6225)

தகவல்:
திரு.ம.வைத்திலிங்கம் (கணவர்)

## திருமதி சதாசிவம் யோகம்மா

மடத்தடி மேற்கு வீதி, சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி சதாசிவம் யோகம்மா 18.07.2002 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லமுத்து சதாசிவத்தின் அன்பு மனைவியும், நடேசமூர்த்தி (ஹொலண்ட்), லண்டனில் வசிக்கும் கிருஸ்ணமூர்த்தி, பாஸ்கரமூர்த்தி, சத்தியமூர்த்தி, ஈஸ்வரமூர்த்தி, கனடாவில் வசிக்கும் கணேசமூர்த்தி, சாவகச்சேரியில் வசிக்கும் சந்திராதேவி, சர்வேஸ்வரமூர்த்தி, சசீலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் மல்லிகா, மங்கை, சுதா, பபா, கிளி (லண்டன்), வசந்தி (கனடா), கனகரத்தினம், ரதி ஆகியோரின் அன்பு மாமியாரும் சிந்துஜா, சாலபன், கானுஜா (சாவகச்சேரி), அருள், பிரசாத், அகல்யன், சயந்தன், மகிந்தா, கல்யாணி, விசாகன், வினோதன், வாகீசன், அபிரன் (லண்டன்), கோகுலன், மயூரி, லகுணன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் அத்தாய, பூநகரியில் வசிக்கும் சதாசிவம் சிவசம்புவின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2002) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லாரை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"மேழிச்செல்வம்",*
*மடத்தடி மேற்கு வீதி,*
*சாவகச்சேரி.* (6227)

தகவல்:
செ.சதாசிவம் (கணவர்)
சி.கனகரத்தினம் (மருமகன் - கிராம உத்தியோகத்தர்)

# கிளைக்குழுத் தெரிவுக்கான அறிவித்தல்

## சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம் (வ-து)

**30.06.2002இல் மேற்படி சங்கத்தின் எல்லாக்கிளைகளுக்குமான கிளைக்குழு தெரிவுகள் இடம் பெற்றபோதும் கீழ்க்குறிப்பிட்ட கிளைகளின் கிளைக்குழுக்களை நிறைவெண் இன்மையால் தெரிவு செய்யமுடியவில்லை. எனவே அவற்றின் கிளைக் குழுக்களைத் தெரிவுசெய்யும் முகமாக மீண்டும் ஒரு சந்தர்ப்பமாக 28.07.2002இல் அக்கிளைகளின் பொதுச்சபைக் கூட்டங்களை அழைக்கப்படுகின்றது.**

**மேற்குறித்த கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களுக்கு சமுகமளித்து வாக்களிக்க தகுதியுடைய அங்கத்தவர்கள், இவ்வறிவித்தலை தனித்தனி அழைப்பாக ஏற்றுக்கொண்டு, கூட்டத்திற்கு 28.07.2002 முற்பகல் 10 மணிக்கு கீழ்க்குறிப்பிடப்படும் இடத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.**

**இக்கூட்டத்திற்கு இங்கு குறிப்பிடப்படுவோர் தவிசாளராகக் கடமையாற்ற என்னால் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.**

| கிளை இல. | கிளையின் பெயர் | தவிசாளராக கடமையாற்றுவோர் | கிளைப்பொதுச்சபைக் கூட்டம் நடைபெறுமிடம் |
|---|---|---|---|
| 04 | நுணாவில் மேற்கு ஜோதி | ஆர்.புவன்ராஜ் | கிளைக்கட்டடம் |
| 10 | மட்டுவில் வடக்கு | வீ.கே.அருந்தவநாதன் | கிளைக்கட்டடம் |
| 13 | சரசாலை வடக்கு | கே.குமாரகுருலிங்கம் | கிளைக்கட்டடம் |
| 15 | கல்வயல் | பீ.தெட்சணாமூர்த்தி | தற்காலிக 9ஆம் கிளைக்கட்டடம் (15ஆம் கிளைக்கு அருகில்) |

**செ.கனகசபாபதி**
கூட்டுறவு உதவி ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

(C/23012)

# செயல்முறைப் பரீட்சை இல்லை

ஜீ.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சையில் அழகியல், தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கு செயல்முறைப பரீட்சைகள் இந்த வருடம் தொடக்கம் நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜீ.சீ.ஈ.சாதாரண பரீட்சையில் அழகியல், தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கு எழுத்துப் பரீட்சை, செயல்முறைப் பரீட்சை என இரண்டு நிலைகளில் பரீட்சைகள் நடத்தப்பட்டு வந்தன.

இவற்றில் செயல்முறைப் பரீட்சைகள் 2002 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதற்றடவையாக பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-11)

## இசைத்தட்டு வெளியீடு

குருநகர் இளைஞர் கலைக்கழகத்தால் 'யாகப்பரே எங்கள் காவலரே' எனும் இசைத் தட்டு, இசைப்பேழை இன்று மாலை 4.30மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலய மண்டபத்தில் நடைபெறும். (ஓ-51)


## விற்பனைக்கு

SONY 21", NATIONAL 18" T.V க்கள், FH, RX றேடியோக்கள், சகலவிதமான றேடியோக்கள், T.V, டெக் ஆகியவற்றின் உதிரிப்பாகங்கள், சகலவிதமான வைன்டிங் கம்பிகள், AC, DC கப்பாசிற்றர்கள், இன்வேட்டர்கள், T.V. அன்ரனாக்கள், ஸ்பீக்கர் பேப்பர் என்பன விற்பனைக்குண்டு.

இவற்றை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.:

**சண் மல்ரி றேட் சென்ரா,**
இல. 142, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (6217)

0/L, 10, 09
மாணவர்களே!
தமிழ்ப் பாடத்தில் அதிவிசேட சித்திபெற சுயமுகவரியிட்ட (முத்திரை ஒட்டிய) கடித உறையுடன் எழுதுங்கள்!
ஆசிரியர் ந.க.குஜரூபன
80, அம்மன் கோயில் வீதி,
பண்டாரிக்குளம்,
வவுனியா.
T.P- 024-2236...
(5171)

எண்பதுகளின் பின்னர் மீண்டும் சுன்னாகத்தில்
## போட்டோ சண்கோ கலர் லாப்
உலகப் புகழ்பெற்ற கொடக் (Kodak) உற்பத்திகள் மூலமாக
**30 நிமிடத்தில் படம்**
**சண்கோ ஸ்ருடியோ, வீடியோ அன் கணனி சேவை**
எமது கலையகத்தில் கறுப்பு – வெள்ளை, கலர்ப் படங்கள் உடனுக்குடனும் அனைத்து வைபவங்களுக்குமான படங்கள் விழா மண்டபத்திலும் வழங்கப்படும்.
(6216) - உரிமையாளர்.

“ஈழத்து இராமேஸ்வரம்”
**புங்குடுதீவு - பாணாவிடைச் சிவன் தேவஸ்தானம்**

மேற்படி ஆலய பரிபாலன தர்மகர்த்தா சபையும் தேர்த்திருப்பணிச் சபையும் கடந்த காலங்களில் ஒன்றிணைந்து செயற்பட்டு வந்தமை தாங்கள் அறிந்ததே. தற்போது தேர்த்திருப்பணிச் சபையினர் தாமே தேர்த்திருப்பணியை முன்னெடுத்துச் செல்லவிருப்பதாக தெரிவித்து பகிரங்க அறிவித்தல் வெளியிட்டு இருப்பதால, இனிவரும் காலங்களில் ஆலய பரிபாலன தர்மகர்த்தா சபையினர் தமது பணியை மட்டுமே மேற்கொள்ள வேண்டுமென சபை தீர்மானித்துள்ளமையை அடியார்களுக்கு இத்தால் அறியத்தருகின்றோம்.

மேற்படி ஆலய பரிபாலன
தர்மகர்த்தா சபையினர்,
புங்குடுதீவு - 07.
(6208)




அனைத்து போரோசொப்ட்
40g கிறீமுடன்,
ரூ.20.00 பெறுமதியான
போரோசொப்ட் சோப்
இலவசம்


சந்தைப்படுத்துவோர்
PHARMCO
MARKETING SERVICES (PVT) LTD.
ஏக விநியோகஸ்தர்:–
JEGHAN PHARMACY.
NO.462/B,HOSPITAL ROAD,
JAFFNA. TEL.021-2194,3191
(C/23010)

# றொபர்ட் ஏஜென்ஸீஸ் லிமிட்டெட்

**50 ஆண்டுகளுக்கு மேலாக உங்களது ஒரே தெரிவு!**

கோயில்கள் பாடசாலைகள மற்றும்
சமூக, பொது நிறுவனங்கள் தொடர்பான நிகழ்வுகளுக்கு
சிறந்த, தரமான ஒலிபெருக்கிச் சாதனங்களைப் பெற
இன்றே நாடுங்கள்



**AHUJA**
ஒலிபெருக்கிச் சாதனங்கள்





- அம்பளிபயர்கள்
- மைக்ரோ போன்கள்
- றிப்/லெக்ஸ் ஹோன்கள்
- மைக்ரோ போன் ஸ்டான்டுகள்
- கசெட் ரெக்கோடர்
- மெகா போன்கள்
- கொன்பரென்ஸ் சிஸ்டெம்கள்
- பாதுகாப்பு சைரன்ஸ் சகிதம் அம்ளிபயர்கள்
- கொலம் ஸ்பீக்கர்கள்




தரச் சிறப்பில்
முன்னணி வகிப்பவை
நம்பகத்தன்மைக்கு
பெயர் பெற்றவை

விலைப்பட்டியலை தபால்/பக்ஸ் அல்லது
ஈ மேயில் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை ரூபா 628/= தொடக்கம்**




நேரடி இறக்குமதியாளர்கள்:
**றொபர்ட் ஏஜென்ஸீஸ் லிமிட்டெட்**
88, றெக்ளமேசன் வீதி, கொழும்பு–11
தொலைபேசி: 421009,320684,344306 தொலைநகல்: 449590
ஈ மெயில்: robertsl@sltnet.lk
கிளை: 108, கெயிசர் வீதி, கொழும்பு–11. தொலைபேசி: 421010
(C/22991)

# புரிந்துணர்வு உடன்படிக்கை சமாதானத்துக்கு அடித்தளம்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

அரசும், விடுதலைப் புலிகளும் செய்து கொண்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை சமாதானத்துக்கான உறுதியான அடித்தளத்தை இட்டுள்ளது என்று இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்துள்ளார்.

சர்வதேச மனிதாபிமான சட்டங்கள், அதன் நடைமுறை என்பன பற்றி, அதிகாரிகளுக்கு விளக்கும் நோக்கில் கொழும்பில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

'உடன்படிக்கை காரணமாக வடக்கில் அமைதியான சூழல் நிலவுகிறது. மக்கள் விடுதலை முன்னணி, விடுதலைப் புலிகள் இயக்கம் என்பன தொடர்ச்சியாக மனித உரிமைகளை மீறி வந்தன. மனிதாபிமான சட்டங்கள் பற்றி விடுதலைப் புலிகளுக்கு விளக்க வேண்டும் என்று செஞ்சிலுவை சர்வதேசக்குழு வலியுறுத்திவந்தது.


சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறும் இராணுவத்தினர் இராணுவ நீதிமன்றத்தின் மூலம் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள்' என்றார். (ஒ-9)

### விசேட பூசை

எதிர்வரும் 24ஆம் திகதி காலை 8.00 மணியளவில் கைதடி உக்களை விநாயகர் தேவஸ்தானத்தில் பன்னிரு திருமுறைகளுக்கான விஷேட சோடசோபசார பூசை, அகத்தியர் தேவாரத திரட்டு முற்றோதல், பன்னிருதிருமுறை பாராயணம் சிறப்புச் சொற்பொழிவு ஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (ஒ)

## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY



BIRTHDAY

### செல்வி. ஜி.ஜேரோமி

**17.07.2002**

இத்தாலியில் வசிக்கும் திரு. திருமதி டயஸ் - துஷ்யந்தி தம்பதிகளின்

செல்வப் புதல்வி ஜிரோமி

தனது இரண்டாவது பிறந்ததினத்தை இன்று (21.07.2002) ஞாயிற்றுக்கிழமை இத்தாலியில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, (ஜெனரல் எஞ்ஜினியர்ஸ், வெள்ளவத்தை), அப்பம்மா, சதீஸ் சித்தப்பா (லண்டன்), சுகி அத்தை குடும்பம் (லண்டன்), நகுலா அத்தை குடும்பம் (சுவிஸ்), ஆஷா அத்தை (லண்டன்), கலா அத்தை குடும்பம் (பிரான்ஸ்), மொரிஷ் பெரியப்பா குடும்பம் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நல்லூர் முருகன் அருளைப் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்க என உளமார வாழ்த்துகின்றோம்.

ஜெயா வெண்டிங் வேக்ஸ்,
யாழ்ப்பாணம். (6226)

தகவல்:
மொரிஷ் (பெரியப்பா)

## சமய சந்நிதிகளில்

சுழிபுரம்,ஜூலை21

சுழிபுரம் கம்பனை அம்பாள் ஆலயத்தில் ஒவ்வொர் ஆடிச் செவ்வாய் நாள்களிலும் மாலை விசேட அபிஷேகங்கள் செய்ய ஏற்பாடுகள் செயயப்பட்டுள்ளன.

எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமைமுதல் தொடர்ந்து வரும் நான்கு செவ்வாய்க்கிழமைகளும் அபிஷேக ஆராதனைகள் நடைபெறவுள்ளன. (ஒ-28)

★ ★ ★

குருநகர்,ஜூலை21

கச்சேரி - நல்லூர் வீதியில் அமைந்துள்ள நல்லூர் ஸ்ரீ மூத்த விநாயகர் கோயிலின் மஹோற்சவம் இம்மாதம் 15ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 24ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ஒ-51)

★ ★ ★

சண்டிலிப்பாய்,ஜூலை21

பண்டத்தரிப்பு முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 15ஆம் திகதி ஆரம்பமாகியது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் 26ஆம் திகதி பூங்காவனமும், அன்னதானமும் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். உற்சவ தினங்களில் இரவு 7 மணிக்கு சமய சொற்பொழிவு இடம்பெற்று வருகின்றது. (ஒ-135)

★ ★ ★

கொழும்புத்துறை,ஜூலை21

குருநகர் புனித யாகப்பர் ஆலய வருடாந்த திருவிழா ஆரம்பமாகி நவநாள் ஆராதனைகள் தினமும் மாலை 5.30 மணிக்கு நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை மாலை நற்கருணை விழாவும், 25ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 7 மணிக்கு திருவிழா திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.

தொடர்ந்து திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும். (ஒ-51-ரி)

### தட்டச்சு திருத்துதல்

- மறைந்த எழுத்து ஓவியர் சூடாமணியின் (அகிலன்ஸ்) விளம்பர பெயர்ப்பலகைகள், வர்ண ஓவிய வேலைகள்.
- சகல விதமான தட்டச்சு இயந்திரங்கள் திருத்துதல்,
- ஸ்ரென்சில், றோணியோ வேலைகள் குறைந்த விலையில் செய்து கொடுக்கப்படும்.

பழைய தட்டச்சு இயந்திரங்கள் வாங்கப்படும்.

சூடாமணி,
ராஜா தட்டச்சு திருத்தகம்,
*இல. 16, கச்சேரி நல்லூர் றோட்,*
*(கச்சேரி அருகில்)* (6224)

# மன்னாரிலிருந்து 500 சைக்கிள்களில் கொழும்புக்கு சமாதானப் பயணம்

சமாதானத்தை வலியுறுத்தும் சைக்கிள் பயணம் நேற்றுமுன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் மன்னாரில் இருந்து ஆரம்பமானது. மன்னார் பொது விளையாட்டரங்கிலிருந்து வண. பிதா யேசுராஜா தலைமையில் ஆரம்பமான இப்பயணத்தில் 500 பேர் பங்கு கொண்டனர்.

மன்னார் ஆயர் இராயப்பு யோசப், அரசாங்க அதிபர் விஸ்வலிங்கம், ஏனைய சமயத் தலைவர்கள் ஆகியோர் இப்பயணத்தை ஆரம்பித்து வைத்தனர்.

மன்னார் மாவட்ட தமிழ் தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் இப்பயணம் நடைபெறுகிறது. வவுனியா, மதவாச்சி, அநுராதபுரம், புத்தளம் வழியாக சமாதான சைக்கிள் பயணம் எதிர்வரும் 24 ஆம் திகதி கொழும்பில் முடிவடையும். (ஒ)

# கல்வி உரிமை மீறல் குறித்து விசாரிக்கக் கோரிக்கை

உயர்கல்வி பெறுவதற்கான உரிமை மீறப்படுவது தொடர்பாக விசாரணை நடத்துமாறு நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர், கல்வி அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடிதுவக்குவைக் கேட்டுள்ளார்.

கல்முனை முஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவி ருஸ்தா பர்வீன் ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் இரசாயனவியல் பாடத்திற்கு எழுதிய விடைத்தாளில் சில அகற்றப்பட்டு பிரஸ்தாப மாணவியின் தந்தைக்குத் தபாலில் அனுப்பிவைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகவே அவர் இக் கோரிக்கையை விடுத்திருக்கிறார்.

இத்தகைய செயல்கள் கல்வி அமைச்சரின் நற்பெயருக்கு களங்கம் கற்பிக்கும் நடவடிக்கையாக அமையலாம். உயர்கல்விக்கான உரிமை மறுக்கப்படுவதை எவ்வகையிலும் அனுமதிக்க இயலாது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் விசாரணை நடத்தி பாதிக்கப்பட்ட மாணவிக்கு நிவாரணம் வழங்கவேண்டும்.

- இவ்வாறு அவர் கோரியிருக்கிறார். (ஒ)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மற்றும் உடுவில், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுகளில் கே.கே.எஸ். வீதிக்கு கிழக்கில் அமைந்துள்ள (வலிகாமம் கிழக்கு கோட்டத்திற்கு உட்பட்ட) அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களின் உரிமையாளர்களுக்குமான விஷேட கலந்துரையாடல் ஒன்று நாளை மாலை 4மணிக்கு வலிகாமம் கிழக்கு அரசியற்துறை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தினர் அறிவித்துள்ளனர். (எ-8)

## அறிவித்தல்

காரைநகர் மத்தி மாதர் சிக்கன சேமிப்பு கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம்

**மேற்படி எமது சங்கத்தில் சேமிப்பு செய்தும், கடன்கள் பெற்றுக் கொண்டவர்களும், மாணவர் சேமிப்புச் செய்து கொண்டவர்களும் தங்கள் சேமிப்புப் புத்தகங்களுடன் காரை - மத்தி J-48 கிராம அலுவலகப் பணிமனையில் திங்கள், வியாழன், சனி ஆகிய நாள்களில் காலை 8.30 - 12.00 மணிவரை வந்து விவரங்களை பதிவு செய்து கொள்ளவும்.**

க.ரஞ்சினிதேவி
தலைவர். (C/23013)

சோ.கமலாம்பிகை
பொருளாளர்.

## கிளைக்குழுத் தெரிவுக்கான அறிவித்தல்

### தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம், கைதடி(வ.து)

**23.06.2002இல் மேற்படி சங்கத்தின் எல்லாக் கிளைகளுக்குமான கிளைக்குழு உறுப்பினர்களை தெரிவுகள் இடம்பெற்றபோதும், கீழ்க் குறிப்பிட்ட கிளைகளின் கிளைக்குழுக்களை நிறைவெண் இன்மையால் தெரிவு செய்ய முடியவில்லை. எனவே அவற்றின் கிளைக் குழுக்களைத் தெரிவு செய்யும் முகமாக மீண்டும் ஒரு சந்தர்ப்பமாக 28.07.2002இல் அக்கிளைகளின் பொதுச் சபைக் கூட்டங்கள் அழைக்கப்படுகின்றன.**

**மேற்குறித்த கிளைப் பொதுச் சபைக் கூட்டங்களுக்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுடைய அங்கத்தவர்கள் இந்த அறிவித்தலை தனித்தனி அழைப்பாக ஏற்றுக்கொண்டு, கூட்டத்திற்கு 28.07.2002 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கீழ்க் குறிப்பிடப்படும் இடத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இக் கூட்டத்திற்கு இங்கு குறிப்பிடப்படுவோர் தவிசாளராகக் கடமையாற்ற என்னால் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.**

| கிளை இல. | கிளை பெயர் | தவிசாளர் பெயர் | கிளைப் பொதுச்சபைக கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 07. | கைதடி நாவற்குழி | ரி.கணபதிப்பிள்ளை | சங்க தலைமைக் காரியாலயம், கைதடி. |
| 08. | மறவன்புலோ | ஏ.நாகலிங்கம் | சங்க தலைமைக் காரியாலயம், கைதடி |
| 09. | தனங்களப்பு | கே.குகதாசன் | சங்க தலைமைக் காரியாலயம், கைதடி. |
| 10. | கைதடி, நாவற்குழி தெற்கு | ஐ.நாகேஸ்வரன் | சங்க தலைமைக் காரியாலயம், கைதடி. |

**செ.கனகசபாபதி,**
கூட்டுறவு உதவி ஆணையாளர், (அபிவிருத்தி) யாழ்ப்பாணம்.

(C-23014)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி இராமநாதன் கோபாலபிள்ளை

*(பிரபல வர்த்தகர் - யாழ்ப்பாணம், S.R.S. Brothers - நயினாதீவு)*

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், 2/1, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராமநாதன் கோபாலபிள்ளை (வர்த்தகர், யாழ்ப்பாணம்) அவர்கள் 19.07.2002 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன் - கதிராசிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் நல்லூர் - யாழ்ப்பாணம் காலஞ்சென்றவர்களான நல்லையா - பூமணி தம்பதியினரின் அன்பு மருமகனும் சறோஜினிதேவியின் அன்புக் கணவரும் கலாநிதி, ஜெயந்திரா (வர்த்தகர், யாழ்ப்பாணம்), மாலதி (இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்), ஜெயக்குமார், ஜெயசீலன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற தையலம்மை, பரமலிங்கம் மற்றும் சிவக்கொழுந்து, காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் கனகசபை, முத்தையா, விசாலாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரரும் நிர்மலேஸ்வரி, கவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் புலேந்திரன் (சுவிஸ் - ஓய்வூதியர் - யாழ்.மாநகர சபை), அ. உலகேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் டிலானி, கபீசன, தனுசங்கர், தாட்சாயினி, அஜித்சங்கர் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2002) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*2/1, மூத்தவிநாயகர் வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (6229)

தகவல்:
கோபாலபிள்ளை ஜெயந்திரா
(மகன் - வர்த்தகர், யாழ்ப்பாணம்)

### திருமதி
### முத்துலிங்கம் (ஜெபரட்ணம்) தனபாக்கியம்

திருநெல்வேலி கிழக்கு, இராமலிங்கம் வீதியைச் சேர்ந்தவரும் கொழும்பை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி முத்துலிங்கம் (ஜெபரட்ணம்) தனபாக்கியம் 19.07.2002 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற முத்துலிங்கம் (ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் மீனலோஜினி (கனடா), ஜெயரட்ணம் (சுவிஸ்), புஸ்பலோஜினி (கொழும்பு), விஜயரட்ணம் (ஜேர்மனி), சந்திரலோஜனி (பிரான்ஸ்), குணரட்ணம் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுப்பிரமணியம் (கனடா), பாலராணி (சுவிஸ்) காலஞ்சென்ற செல்வராஜா (வர்த்தகர், A.S.Sangarapillai & Sons) லூட்ஸ்மேரி (ஜேர்மனி), மகேந்திரன் (பிரான்ஸ்), நளாயினி (கனடா) ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக பொரளை ஜெயரட்ண மலர்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*98, விவேகானந்த மேடு,*
*கொழும்பு - 13*
T.P.:473269

தகவல்:
திருமதி புஸ்பலோஜினி செல்வராஜா

(சி-23015)

# வைகோ மீதான விசாரணைகளுக்கென பூந்தமல்லியில் சிறப்பு நீதிமன்றம்

## தமிழக அரசு நியமித்தது

சென்னை,ஜூலை21

ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ மீதான விசாரணைகளை மேற்கொள்வதற்கென, தமிழக அரசு பூந்தமல்லியில் சிறப்பு நீதிமன்றம் ஒன்றை அமைத்துள்ளது.

வைகோ மீதான விசாரணைகள் தமிழக அரசிடம் ஒப்படைக்கப்பட்டு கியூ பிரிவினரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் - 'பொடா' சட்டத்தின் கீழான விசாரணைகளை மேற்கொள்வதற்கென பூந்தமல்லியில் சிறப்பு நீதிமன்றம் ஒன்றைத் தமிழகஅரசு அமைத்துள்ளது.

வைகோவை 'பொடா' சட்டத்தின் கீழ் கைது செய்வதற்கான பிடியாணையை பிறப்பிப்பதற்கு திருமங்கலம் நடுவர் மன்ற நீதிபதிக்கு அதிகாரம் உண்டா? என்ற சர்ச்சை எழுந்துள்ள நிலையில், பூந்தமல்லி சிறைச்சாலையை தனி நீதிமன்றமாக மாற்ற தமிழக அரசு முடிவெடுத்துள்ளது.

(எ-9)

### வயோதிப மாது மீதான தாக்குதல்

# உரும்பிராய் இளைஞர் மூவர் கைதாகி விளக்க மறியலில்

யாழ்ப்பாணம்,ஜூலை21

உரும்பிராயைச் சேர்ந்த வயோதிப மாது ஒருவரைத் தாக்கியதாகத் தெரிவித்து மூன்று இளைஞர்களை கோப்பாய் பொலீஸார் நேற்று யாழ்.நீதிமன்றில் நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

தாக்குதலுக்கு உள்ளான செல்லர் செல்லம்மா என்ற வயோதிப மாது யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உரும்பிராயைச் சேர்ந்த தனபாலசிங்கம் கௌசீகன், தனபாலசிங்கம் கௌதீபன், புஷ்பராஜா ரஞ்சித் ஆகியோரே மேற்படி குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டவர்களாவர்.

அண்மையில் கோப்பாய் பொலீஸார் தனபாலசிங்கம் என்பவரது வீட்டில் இருந்து ஒரு தொகுதி கசிப்பை மீட்டிருந்தனர்.

மேற்படி தாக்குதலுக்கு இலக்கான வயோதிப மாதுவே கசிப்பு விவகாரம். குறித்த தகவலைப் பொலீஸாருக்குத் தெரிவித்ததாகக் கூறியே மூன்று இளைஞர்களும் அவர்மேல் தாக்குதல் நடத்தியுள்ளனர் எனக்கூறப்பட்டது.

மேற்படி விவகாரம் குறித்து விசாரணை நடத்திய நீதிவான் இவர்கள் மூவரையும் எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(எ-8)

### உதைபந்தாட்டம்

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் வடமராட்சி விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் திக்கமுனை மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

☆ மாலை 4மணி - அண்ணா சிலையடி வி.க.அணி எதிர் சென். அன்ரனீஸ் வி.க. 'ஏ' அணி.

☆ மாலை 5 மணி - பொமேர்ஸ் வி.க. அணி எதிர் உதயதாரகை வி.க. அணி.

(ம-3)

### மெய்வன்மை போட்டி

சங்கானை,ஜூலை21

பனிப்புலம் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு, பனிப்புலம் அம்மன் கோயிலடி முன்றிலில் கழகத் தலைவர் த.ரஞ்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பனிப்புலம் கிராம உத்தியோகத்தர் எஸ்.ஜீவராசா பிரதமவிருந்தினராகவும், சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலய அதிபர் ந.பாலச்சந்திரன்,பண்ணாகம் வடக்கு அ.மி.த.க.பாடசாலை அதிபர் க.இரத்தினேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

(எ-29)

### பச்சிலைப்பள்ளி பாடசாலை அதிபர்களுக்கு!

பச்சிலைப்பள்ளி பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவரின் சீருடை விநியோகம் குறித்த கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு புலோலியில் இயங்கும் பளை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

பளை பகுதியை சேர்ந்த பாடசாலைகளின் அதிபர்கள் அனைவரையும் மேற்படி கலந்துரையாடலுக்கு சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

(ஒ)

### அளவைகளுக்கு முத்திரையிடல்

தென்மராட்சி,ஜூலை21

யாழ்ப்பாணம் அளவை, நிறுவைத் திணைக்களத்தினால் சாவகச்சேரி பிரதேச சபை, சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உளள வர்த்தக நிலையங்கள், வியாபாரிகள் ஆகியோரிடமுள்ள அளவை நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணியினை அடுத்தவாரம் ஆரம்பிக்கவுள்ளனர்.

எதிர்வரும் 25,26,29,30, ஒகஸ்ட் 1ஆகிய திகதிகளில் கொடிகாமத்தில் உள்ள சாவகச்சேரி பிரதேச சபை தலைமை அலுவலகத்திலும் -

ஒகஸ்ட் 06,08,09 ஆகிய திகதிகளில் மீசாலையில் உள்ள சாவகச்சேரி நகரசபை அலுவலகத்திலும் காலை 9.00மணி தொடக்கம் பகல் 1.30 மணிவரை முத்திரையிடும் பணி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-117)

# களுத்துறை கைதிகள் போராட்டம் தொடர்கிறது

கொழும்பு,ஜூலை21

களுத்துறை சிறைச்சாலையிலுள்ள 51 தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்யுமாறு கோரி நேற்று சனிக்கிழமை இரண்டாவது நாளாகவும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களுக்கு ஆதரவாக 'சி' பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 14 தமிழ் அரசியல் கைதிகளும் சிறைச்சாலைக் கூரை மீது ஏறி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தம்மை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமென கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னதாக அரசு கூறியிருந்தபோதிலும் -

தமது விடுதலைக்கான நடவடிக்கைகள் எதுவும் குறித்து இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என கைதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதுவே தமது இறுதிப் போராட்டமாக அமையுமெனவும் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

(எ-9)

### வைகோ கைதைக் கண்டித்து

# வாழைச்சேனையில் பேரணி ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு

மட்டக்களப்பு,ஜூலை21

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கைதுசெய்யப்பட்டதைக் கண்டித்து வாழைச்சேனையில் நேற்று சனிக்கிழமை கண்டனப் பேரணி ஒன்று இடம்பெற்றது.

அங்கு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டது. வாழைச்சேனை கைலாய விநாயகர் கோயிலில் இருந்து காலை 9.30 மணிக்கு ஆரம்பமான இப்பேரணி, பிரதேச செயலகத்தை காலை 10.30 மணி அளவில் சென்றடைந்தது. இப்பேரணியில் சுமார் 4 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டனர்.

பிரதேச செயலகத்தில் வாழைச்சேனை இந்துக் கல்லூரி அதிபர் மு.தவராசா தலைமையில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது.

இந்திய மத்திய அரசுக்கு அனுப்புவதற்கான மகஜர் ஒன்றும் வாழைச்சேனை பிரதேச செயலர் சி.புண்ணியமூர்த்தியிடம் கையளிக்கப்பட்டது.

(எ-9)


# பாராட்டி வாழ்த்துகிறோம்

இன்று (21.07.2002) பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மக்கள் வங்கிக் கிளைகளில் 25வருடம் உன்னத சேவையாற்றியமைக்காக, எமது மக்கள் வங்கித் தலைவர் அவர்களால் தங்கப் பதக்கமும் பாராட்டுப் பத்திரமும் வழங்கிக் கௌரவிக்கப்படும் எமது பிரதான வீதி கிளையைச் சேர்ந்த

**திரு.ச.சிவபாலன் (உதவி முகாமையாளர்)**
**திருமதி யோ.மனோகரன் (உதவி முகாமையாளர்)**
**திரு.M.N.இராஜதுரை**

ஆகியோரையும் பாராட்டுப் பெறும் ஏனையோரையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*ஊழியர்கள்,*
*மக்கள் வங்கி,*
*பிரதான வீதி கிளை*

(6244)



# யாழ். - கொழும்பு பஸ் சேவை

கொழும்பு, கொட்டாஞ்சேனை, மட்டக்குளி, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, தெஹிவளை ஆகிய இடங்களுக்கு எதுவித சிரமுமின்றி நேரில் செல்வதற்கு உங்கள் ஆசனப் பதிவுகளை முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளலாம்.

*குறிப்பு:* யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்வதற்கு வாடகை வாகனத்திற்கு 6000 ரூபா மட்டுமே. 5பேர் பயணத்தை மேற்கொள்ளலாம்.

**செல்வம் ஸ்ரோர்ஸ் (V.T.G)**
**ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P: No: 3605**

(6245)



# விற்பனைப் பிரதிநிதி தேவை
## (MEDICAL SALE REPRESANTATIVE)

ஆங்கில மருந்துப் பொருள்களை இறக்குமதி செய்து விநியோகம் செய்யும் மிகவும் பிரபல்யமான நிறுவனங்களாகிய

★ EMERCHEMIE NB LTD.
★ GEORGE STEUARTS AGENCIES LTD.
★ HAYLEYS PHARMACEUTICALS
★ HAYLEYS
★ PLENTY FOODS (LINK)

இந்த நிறுவனத்தின் விற்பனைப் பிரதிநிதியாகக் கடமையாற்ற நல்ல ஆரோக்கியமான உடல்வளம், பிறருடன் நன்கு பழகும் தன்மை, சுறுசுறுப்பான இளம் வயதினரான **ஆண், பெண்** இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். G.C.E. (O/L), ஆங்கில அறிவுடன் சிங்களம் பேசத் தெரியுமானால் மேலதிக தகைமையாக ஏற்றுக்கொள்ளப்படும். சுயமுழு விவரங்களுடன் நேரிலோ, தபால் மூலமோ உடன் விண்ணப்பிக்கவும்.

**WESCO (யாழ்.மருந்தகம்)**
**470 (250), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**T.P. - 3188, FAX - 3188**

(6238)



# தேவை

மில் வேலைகளில் நன்கு அனுபவம் உள்ளவர் தேவை.
தொடர்பு:
பிருந்தா மில்ஸ்,
*N-18, நக்கா றோட்,*
யாழ்ப்பாணம்

(6243)



**நிரஞ்சனாஸ்**
சங்கானை
ரஜனி, சிவாஜி, சௌந்தர்யா நடித்த
**படையப்பா**
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்)
(C-22944)



**ராஜா** யாழ்ப்பாணம்.
அஜித், ஜோதிகா, வடிவேல், ராதாரவி நடித்த
**ராஜா**
தினசரி 10.30, 2.30, 5.30
(C-22943)



**நாகம்ஸ்** சுன்னாகம்
பிரபுதேவா, கீர்த்திரெட்டி, வடிவேல், கடாலி, விவேக் நடித்த
**மனதைத் திருடிவிட்டாய்**
காட்சிகள்: 11.00, 3.00, 6.30 (பு.நே)
(6230)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்வராசா சிவபாக்கியம்

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராசா சிவபாக்கியம் அவர்கள் 15-07-2002 திங்கட்கிழமை சுவிஸில் மகன் வீட்டில் காலமானார்.

அன்னார் செல்வராசாவின் (கொல்லங்கலட்டி) அன்பு மனைவியும் கலைச்செல்வி (சுவிஸ்), ரவீந்திரன் (சுன்னாகம் ப.நோ.கூ.ச.), சுரேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தெட்சணாமூர்த்தி (சுவிஸ்), புஸ்பகாந்தி (சுன்னாகம்), அனுசியா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் விதூரிசன், ரசிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கனகசுந்தரம், காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் செந்தில்நாதன், சந்திரசிங்கம், புஸ்பாதேவி ஆகியோரின் சகோதரியும் செல்லத்துரை, செல்லமுத்து, காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் மனோன்மணி, பாலசுப்பிரமணியம், பாலசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-07-2002) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுன்னாகம் தெற்கு,*
*பெரியமதவடி,*
*சுன்னாகம்.* (6236)

தகவல்:
அ.செல்வராசா
(கணவர்)

## சிவஸ்ரீ முத்துச்சாமி ஐயர் சிவகடாட்சக் குருக்கள் (மயிலணி)

(முன்னாள் பிரதம குரு சுன்னாகம். ஊரிசாட்டி ஸ்ரீ சிவபுத்ராஜர் கோயில்)

சுன்னாகம், மயிலணியைச் சேர்ந்த சிவஸ்ரீ முத்துச்சாமி ஐயர் சிவகடாட்சக் குருக்கள் நேற்று (20-07-2002) சனிக்கிழமை ஆனைக்கோட்டையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகாமசௌந்தரி அம்மாவின் அன்புக் கணவரும் விசாலாட்சி, காலஞ்சென்ற நாகேஸ்வரக் குருக்கள் மற்றும் சிவப்பிரியாதேவி, பத்மாவதி, கெஜாவல்லி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற மகேஸ்வரசர்மா மற்றும் லலிதாம்பாள், தியாகராஜக் குருக்கள், சண்முகசுந்தரக் குருக்கள், தியாகராஜக் குருக்கள், கேதீஸ்வரக் குருக்கள் ஆகியோரின் அன்பு மாமனாரும் கமலக்கண்ணன், சிவசங்கர், சிவசுந்தர், சிவமனோகர், பிரதீபா, மயூரகிரி ஆகியோரின் பாசமிகு பேரனும் கஜபரன், கஜலோஜனா ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-07-2002) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் சம்பந்தப்பிள்ளையார் கோவிலடி, ஆனைக்கோட்டை என்ற முகவரியிலுள்ள இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கரையாம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சம்பந்தப்பிள்ளையார் கோயிலடி,*
*சங்கரப்பிள்ளை வீதி,*
*ஆனைக்கோட்டை.* (6237)

தகவல்:
இ.கேதீஸ்வரக்குருக்கள்
(மருமகன்)

## திருமதி பொன்னையா சின்னத்தங்கச்சி

ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகக்கொண்ட திருமதி பொன்னையா சின்னத்தங்கச்சி நேற்று (20-07-2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அரியகுட்டி - தையல்முத்து தம்பதிகளின் இளைய மகளும் காலஞ்சென்றவர்களான அ.பொன்னுத்துரை, சு.தங்கச்சியம்மா, அ.அருணாசலம், அ.செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி தி.லோகாம்பிகை, சி.அருளாம்பிகை, பொ.தருமராசா, இ.லில்லிமலர் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் உரும்பிராய் வடக்கு, திருச்செல்வம் லோகாம்பிகையின் (பபா) இல்லத்தில் இன்று (21-07-2002) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊரெழு பொக்கணை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஞானசம்பந்தர் வீதி,*
*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.* (6241)

தகவல்:
திருமதி தி.லோகாம்பிகை (மகள்),
பொ.தருமராசா (மகன்).

## பிரதமர் ரணில் நேற்று அமெரிக்கா பயணம்!

அமெரிக்காவுக்கு 5 நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று வந்து சேர்ந்த இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ்ஷை எதிர்வரும் புதன்கிழமை சந்தித்துப் பேசவிருக்கின்றார்.

நோர்வேயின் அனுசரணையுடன் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் குறித்து பிரதமர் ரணில் அவருக்கு விளக்கமளிக்க இருக்கிறார்.

பிரதமர் தனது விஜயத்தின்போது புஷ்ஷின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திருமதி கொண்டொசா றைஸ், வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் உட்படப் பலரைச் சந்திக்கவுள்ளார். இரு நாடுகள் இடையிலான இருவர்த்தக உடன்பாடுகள் தொடர்பாகவும் தலைவர்கள் பேச்சு நடத்துவார்கள் என்று பிரதமருடன் அமெரிக்கா சென்றுள்ள அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். (ம-3)

## சோதனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரமாகச் சென்றுவர அனுமதி வழங்கப்பட வேண்டுமென கூட்டத்தில் கலந்து கொண்ட பலரும் கோரிக்கை விடுத்தனர்.

கடந்த வருடங்களில் கீரிமலை சென்ற பக்தர்கள் எதிர்நோக்கிய சிரமங்கள் குறித்தும் அங்கு எடுத்துக் கூறப்பட்டது.

இதனை அடுத்து கருத்து வெளியிட்ட பாதுகாப்பு செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ கீரிமலை செல்லும் பக்தர்கள் சுதந்திரமாக சென்றுவர ஏற்பாடு செய்துகொடுக்கப்படும்-என்றார். (எ-3)

MURTHY
ADVERTISING SERVICES
2789
பலாலி யாழ்.சேவையில் விளம்பரம் செய்ய விரும்புகிறீர்களா?
☆பிறந்தநாள் ☆வர்த்தக விளம்பரம் ☆மரண அறிவித்தல் எதுவானாலும் எமக்கு போன் செய்யுங்கள்.
☆ மூர்த்தி ☆
அட்வர்டைஸிங் சேவிஸ்,
தேவி அச்சக ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
யாழ்.- கொழும்பு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவோம்.

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – 5 நாளைய உதயனில் இடம்பெறும்.**

(மேலதிக பிரதிகளைப் பெற விரும்புவோர் வினாத்தாள் ஒன்றுக்கு ஒரு ரூபா வீதம் உதயன் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.)

## மீள்குடியமர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற உறுப்பினர்களான வீ.ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராஜா, என்.ரவிராஜ், ஜீ.ஜீ.கஜேந்திரகுமார், எம்.கே. சிவாஜிலிங்கம் மற்றும் அரச அதிகாரிகள், வலி.வடக்குப் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்கேற்றனர்.

இந்த மாநாட்டில் வலி.வடக்கு மக்கள் மீளக்குடியமர இடமளிக்க வேண்டிய அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்து உரையாற்றிய பாதுகாப்பு அமைச்சுச் செயலர் மேலும் கூறியதாவது:-

1982 ஆம் ஆண்டு முதன்முதலில் இங்கு வந்தேன். பின்னர் பல தடவைகள் வந்து இந்தப் பிரதேச மக்களுடன் கலந்துரையாடியுள்ளேன். 1986 ஆம் ஆண்டு வந்தபோது பாலைவனம்போல் இந்தப் பிரதேசம் காட்சி தந்தது. இன்றும் அதேநிலையில் தான் இந்தப் பகுதியைப் பார்க்கிறேன்.

பிரதமரின் பணிப்பின் பேரில் இப்பகுதியை மீண்டும் 1984ஆம் ஆண்டுக்கு முந்திய நிலைக்காவது எப்படிக் கட்டியெழுப்பலாம் என்று ஆராயவே இங்கு வந்துள்ளேன். அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவிருக்கின்றோம்.

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுத்துவந்த கோரிக்கைகளின்பேரில் மக்களை எவ்வாறு மீளக்குடியமர்த்தலாம் என்று இங்கு ஆராயவிருக்கின்றோம். சில ஒழுங்குமுறைகள் வகுக்கப்படவேண்டும். கட்டம் கட்டமாகவே மீள்குடியமர்வு இடம்பெறவேண்டும்.

மக்களை மீளக்குடியமர்த்துவது என்பது இலகுவான விடயமல்ல பாதுகாப்புக் காரணங்கள் மட்டுமல்லாமல் வேறு காரணங்களும் இதற்குத் தடையாக இருக்கிறது.

மீளக்குடியமருமாறு அனுமதித்ததும், மக்கள் அங்கு சென்று எல்லை போடுதல் முதல் உடைமைகளைப் பெறுவது வரையான செயற்பாடுகளில் சண்டைபிடிப்பார்கள். எனவே மக்கள் குடியமர முன்னர் அவர்களது உறுதிகள் மற்றும் ஆவணங்கள் பரிசோதிக்கப்பட வேண்டும். அவற்றின் அடிப்படையிலேயே மக்களைக் குடியமர அனுமதிக்க முடியும்.

எல்லைகள் அற்ற ஒரே நிலமாகவே இந்தப் பிரதேசம் தற்போது காட்சியளிக்கின்றது. அரச அதிகாரிகள், கிராமசேவையாளர்கள் தமது பகுதி மக்களை சரியாக இனங்கண்டு அவர்கள் மீளக்குடியமர ஏற்பாடு செய்யவேண்டும்.

ஆலயங்கள், பாடசாலைகள், பொதுக் கட்டடங்கள் ஆகியவற்றில் இருந்து படையினர் வெளியேறி வருகின்றனர். 90 சதவீதமான இடங்களில் இருந்து வெளியேறிவிட்டனர். ஓகஸ்ட் 2ஆம் திகதிக்கு முன் சகல இடங்களிலும் இருந்து படையினர் வெளியேறிவிடுவர். எனினும் பாதுகாப்பு வலயத்தில் உள்ள சில பாடசாலைகளில் இருந்து படையினரை வெளியேற்ற முடியாது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இருந்து படையினர் வெளியேறிவிட்டனர். ஆனாலும் அதற்கு அண்மையிலேயே அந்தப் படையினர் புதிய முகாம் அமைத்துள்ளனர். அவர்கள் வேறு இடத்திற்குச் செல்ல வசதியில்லை.

நிரந்தர சமாதானம் ஏற்பட்டுவிட்டால் ஒருசில படையணிகளை இங்கு வைத்துக்கொண்டு ஏனையோரை வெளியிடங்களுக்கு அனுப்ப முடியும். அந்த நிலை இன்னும் வரவில்லை. அதனால் படையினரை இங்கேயே வைத்திருக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

மக்கள் மீளக்குடியமரும் விடயத்தில் எந்தவித அரசியல் லாபமும் தேட எவரும்முயற்சிக்கக் கூடாது. மனிதாபிமான அடிப்படையில் செயற்பட வேண்டும். 6, 7 மாதங்களில் சகல விடயங்களையும் சாதிக்கமுடியாது. படிப்படியாகவே செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது - என்றார். (ம-3)

## தீவக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளது.

மேற்படி மீனவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோரி தம்பாட்டிக் கிராமியக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், தீவக மக்கள் நலன் காப்பகம் ஆகியன யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன. (எ-3)



சென்னையில் சனிக்கிழமை நடைபெற்ற உலகத் தமிழர் பேரமைப்புத் தொடக்க விழாவில், எரிக்கப்பட்ட யாழ். நூலகத்துக்கு வழங்கவென, தாம் வாழ்நாள் முழுவதும் சேகரித்த 30 ஆயிரம் நூல்களை இலங்கை சமூக வளர்ச்சித்துறை அமைச்சர் பி.சந்திரசேகரனிடம் வழங்குகிறார் பேரமைப்பு நிதிக்குழு உறுப்பினர் நா.ப. இராமசாமி. உடன் (இடமிருந்து) தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி.

## செங்கலடிப் பொறுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுகுறித்து கண்காணிப்புக் குழுவினர், படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினர். இதனை அடுத்து செங்கலடி இராணுவமுகாம் பொறுப்பதிகாரி, புலி உறுப்பினர் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு வருத்தம் தெரிவித்தார். சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவச் சிப்பாயை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

மட்டக்களப்பு காயான்கேணியில் கூட்டம் நடத்திய விடுதலைப் புலிகளின் காயான்கேணி அரசியல் துறைப் பொறுப்பாளர் சேனாதி, படையினரால் கைதுசெய்யப்பட்டு ஒரு மணிநேரம் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இது குறித்து மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட தளபதி கேணல் கருணாவுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. அவர் படை அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு பேசினார். அதன் பின்னர் சேனாதி விடுதலை செய்யப்பட்டார்.

இதற்கிடையில் -

விடுதலைப் புலிகள் கூட்டம் நடத்த இடவசதி ஏற்படுத்திக் கொடுத்தார் என்று கூறி வாகரைப் பகுதி குடும்பஸ்தர் ஒருவர் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மிரட்டப்பட்டுள்ளார். இதனால், அச்சமடைந்த அவர் தனது குடும்பத்துடன் அங்கிருந்து வேறிடத்துக்குச் சென்றுவிட்டார்.

இந்தச் சம்பவங்கள் குறித்தும் கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் முறையிட்டுள்ளனர். (ம-3)

## கண்காணிப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்குப் பின்னர் அதற்கு மேலதிகமாக விசேட திட்டம் ஒன்றின் கீழ் இந்த வசதியை அரசு செய்ய வேண்டும் என்று கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டு உள்ளூர் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். அவர்களும் ஆபத்துக்களை எதிர்நோக்கியுள்ளனர் என்பதால் அவர்களையும் காப்புறுதி செய்ய வேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தப்பட்டது. (ம)

**காரியாலயத்திற்கு வீடு தேவை**
புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள பத்திரிகை நிறுவனமொன்றிற்கு சகல வசதிகளும் கொண்ட வீடு - யாழ். மாநகர சபை, அதனை அண்டிய பகுதிகளில் - தேவையாகவுள்ளது.
தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்- 021 - 3682
(6235)

**ஆங்கில/சிங்கள வகுப்புகள்**
**English/Sinhala Classes**
பல்லாண்டு கால அநுபவமிக்க ஆசிரியர்
T.SAGATHEVAN B.A.London
அவர்களுடைய ஆங்கில/சிங்கள வகுப்புகள் மீண்டும் ஆரம்பமாகி உள்ளன.
தனிப்பட்ட முறையிலும், சிறு குழுக்களாகவும் ஒழுங்கு செய்துகொள்ளலாம்.
உங்களுக்கு வேண்டிய சகல விதமான கடிதங்கள், படிவங்கள்
மொழிபெயர்ப்பு சம்பந்தப்பட்ட வேலைகள் கணனி மூலம் குறுகிய காலத்தில் செய்துதரப்படும்.
விவரங்களுக்கு:
**TUITION AND SECRETARIAL SERVICE,**
*46, Pirappankulam Lane, Vannarpannai, Jaffna. T.P. 021-3520.*
(6150)

**ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம்**
**குருபூர்ணிமா விழா**

23-07-2002 மாலை 4.00 மணி
*அன்புடையீர்!*
திருவருளை முன்னிட்டு மேற்படி குருபூர்ணிமா விழா நாளைமறுதினம் (23-07-2002) செவ்வாய்க்கிழமை பூரணை அன்று மாலை 4.00 மணிக்கு ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டத்தில் நடைபெறவுள்ளது. விழாவில் திருவடி பூசை, திரு ஊஞ்சல், ஆன்மீகப் பெரியார்களின் ஆசியுரை என்பன நடைபெற உள்ளன. இவ்விழாவில் கலந்துகொண்டு இறையருளையும், குருவருளையும் பெறும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
*ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம்,*
*பழைய வீதி,*
*கோப்பாய்.*
(6221)

**ஜசுபி தயாரிப்புகள்**
Quality Jaffna Product
பலவகையான
◆ ஜாம்
◆ கோர்டியல்
◆ சோஸ்
மற்றும்
◆ பழரசம்
◆ சட்னி
◆ மோர் மிளகாய்
◆ ஊறுகாய்
(மொத்த வியாபாரிகளுக்கு விசேட கழிவுகள் வழங்கப்படும்)
*மேலதிக விவரங்களுக்கு :*
ஜசுபி தொழிலகம், சுழிபுரம், மானிப்பாய் வீதி, உடுவில்.
*தலைமையகம்:-* சுன்னாகம் பல நோ.கூட்டுறவுச் சங்கம், கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.
T.P. No. -070-212380, 21281.3
ACTION FAIM
(C/23001)

**இளமை மற்றும் அழகின் ரகசியம்**
விஞ்ஞான சான்று பெற்றது. பக்க விளைவுகள் இல்லை.
**பயோட்டின் - H**
உங்கள் கூந்தல், சருமம் மற்றும் நகங்களின் ஊட்டத்திற்கு...
திலம் இரண்டே கேப்ஸ்யூல்கள்
மேலும் தலைமுடி உதிர்தல், இளநரை, மெல்லிய உடையக் கூடிய முடி போன்றவற்றிலிருந்து முற்றாக நிவாரணம் பெற BIOTIN - H உதவுவதாக விஞ்ஞான ரீதியாக கண்டறியப்பட்டுள்ளது.
தரமிக்க BIOTIN - H
மக்களின் நம்பிக்கையை வென்ற துரித நிவாரணி
(C-22926)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிரைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.07.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.